# செந்தமிழ்

| தொகுதி சுஅ. 68 | திருவள்ளுவர் 2004 ஆண்டு<br>பரிதாபி பங்குனி – மார்ச்சு 1973 | பகுதி க - 1 |
| --- | --- | --- |

## பொருளடக்கம்.

பக்கம்

1. 'சங்கம் நிறுவித்தமிழ் வளர்த்த சான்ரோர் விழா முன்னுரை' 3
திரு. ஆ. ஆண்டியப்பன் அவர்கள்.

2. விழாத் தலைமைப் பேருரை
திரு. ஆர். செல்லத்தேவர் அவர்கள் பி.ஏ; பி.எல்; 13

3. ,, தொடக்கப் பேருரை
திரு. டாக்டர் மே. சுந்தரம் அவர்கள் எம்.ஏ; எம். லிட், பி.எச்.டி. 15

4. சிறப்புப் பேருரை
திரு. பண்டித வித்துவான் மீ. கந்தசாமிப்புலவர் அவர்கள் 23

5. கருத்தரங்கத் தலைமைப் பேருரை
திரு. டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் எம்.ஏ; எம் ஓ.எல்; பி.எச்.டி. 32

6. தலைமைக் கவிதை
பாண்டித்துரைத்தேவர் பாமாலைக் கவியரங்கம்
திரு. பாவலரேறு ச. பாலசுந்தரம் அவர்கள் க

7. 'சங்கம் நிறுவிய எங்கள் துரை'
திரு. பாவலரேறு ச. பாலசுந்தரம் அவர்கள் ச

8. 'கொடை மறவோன்'
புலவர் திரு. இரா. இளங்குமரன் அவர்கள் கய


9. 'பைந்தமிழ்ச் செல்வர் பாண்டித்துரை'
திரு. கவிஞர் ப. சங்கரலிங்கம் அவர்கள் யஅ

10. 'வண்டமிழ் வளர்த்த வள்ளல்'
திரு. புலவர்மணி தி. கி. சுந்தரமூர்த்தி அவர்கள் உங

11. 'பாவலர் போற்றிய காவலர்'
புலவர் திரு. சி. இராமசாமியார் அவர்கள் உஎ

12. 'நற்புகழ் நிறுவிய நாவலர்'
தமிழ்நாவலர் திரு. சி. அரசப்பனார் அவர்கள் நஉ

13. கவியரங்கத் தலைவர் நிறைவுரை. நஅ



செந்தமிழ் புரக்கும் மாடமலி கூடல்நகரின்கண்
நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவிய
நற்றமிழ் வள்ளல்

**பொன். பாண்டித்துரைச்சாமித் தேவர்.**

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ச் சங்கம்!

# சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த சான்றோர் விழா

## முன்னுரை.

"மன்னன் கவிஞர் மனமலர்க்கு மார்த்தாண்ட
னென்ன வருபாற்க ரேந்திரனு — மன்னு புகழ்ப்
பாண்டித் துரையென்னும் பாரிநிகர் வள்ளலும்போ
லீண்டித் தமிழ் வளர்த்தார் யார்."

அன்னைத் தமிழ்மொழி அரியணை ஏறி இருக்கின்ற காலம் இது. வானளாவப் பறக்கிறது தமிழ்க் கொடி! தாய்த் தமிழ் ஏற்றம் பெறவும், துறை தோறும் தமிழ் தோற்றம் தரவும், தனித் தமிழால் உணர்வூட்டி வருகிறது தமிழக அரசு இன்று! முப்பால் விளக்கம் தரும் தமிழ் மறையாம் வள்ளுவ ஒலி பரவி உலகப் பொதுமறையாக மக்களின் அகவிருளை நீக்கி வருகிறது! தமிழால் உலகாளுவோம் என்ற முழக்கம் தரணியெங்கும் ஒலிக்கின்றது இன்றைய நாளிலே! பெருமைப்படுகிறோம் நாம், வாழ்க; வளர்க என்று வாழ்த்துரையும் வழங்குகின்றோம்.

ஆனால் ...............!

இத்துணைச் சிறப்பிற்கும், உயர்விற்கும் வித்தூன்றிய; சீரிய செயலும், நேரிய நெறியும் துணை நிற்க; நந்தமிழன்னைக்கு நல்லணி செய்த செல்வர்கள்; தமது வாழ்நாள் முழுதும் வண்டமிழ் பேணி கொள்கையும் குறிக்கோளும் மாறாமல்; வேற்று மொழியால் நாட்டு மொழி ஒளியிழந்து இருள் சூழ்ந்து நின்ற

காலை தனித்தமிழ்மொழி தழைத்தோங்க; மறக்குல மாண்புடன் நாற்றிசையும் நறுமணம்பரப்பி; தன் உரிமைப் பொருளெல்லாம் தமிழ் உயர்வுக்கேதந்து, உழைப்பினை ஈந்து, அருந்தமிழ் வளர்த்த கலைஞர்களை; அருங்கலை வளர்த்த வள்ளல்களை நினைவில் கொள்ள வேண்டாவோ?

---

தமிழகத்திலே முடியுடைப் பேரரசு நடாத்திய பெரு மன்னர் மூவருள்ளும் தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த பெருமையும், சங்கப்புலவரும், சான்றோர் பலரும் இருந்து அருங் கலைகள் வளர்த்த மாண்பும், பாண்டிய நாட்டிற்கே உரித்தா னவை, பாண்டிய மன்னர்களே தமிழ் வளர்ப்பதில் சிறந்து விளங்கினர்.

அப் பெருமன்னர்களின் பரம்பரை பல படையெழுச்சி களுக்கு இடையிலும் கி. பி. 1750ஆம் ஆண்டுவரையிலும் நாட்டை ஆண்டு வந்தது.

கடைச்சங்க இறுதிக்காலம் அறுதியிட்டுக்கூற இயலாது போனாலும் 'மூன்றாம் நூற்றாண்டு' என்று சான்று காட்டியுள்ள அறிஞர் பெருமக்களது கூற்றுப்படி வைத்துக் கொண்டால் அன்றிலிருந்து இருபதாம் நூற்றாண்டுத்தொடக்கம் வரையிலும் இடையிலே துவண்ட காலம் பதினாறு நூற்றாண்டுகளாகும். அக்காலத்திலே அருந்தமிழை மேலுயர்த்த அயராது உழைத் தோர் பலர். நாட்டுமக்கள் நல்லறவாழ்விற்கு உழைப்பினை ஈந்து வரலாற்றிலே இடம் பெற்றவரும் பலர், தென்னாலும், வன் னாலும் இலங்கிவைத்த அருங்கலை வல்லுநர்கள் பலர், ஐயத்தை அறுப்பதற்கு ஆய்ந்துரைகளும், எண்ணற்ற வழிநூலும் மொழி நூலும் வரைந்தோர் பலர். மங்காத தமிழ் மகனாய் விறு பெற்றுயர்ந்த மறத்தமிழர் எண்ணிலடங்கார், எடுத்துரைப் பின் விரியுமன்றோ!

என்றாலும் சங்க காலத்திற்குப் பின் (கி. பி. 3-ஆம் நூற் றாண்டிற்குப் பின்) கன்னித் தமிழ் பேணி வளர்த்த தமிழகத் திலே தமிழ் ஆராய்ச்சிக்குத் தமிழ்ச் சங்கமோ, தமிழ்ப் பேரவை யோ அமைத்துத் தமிழ் வளர்த்ததாக வரலாற்றுச் சான்றுகள்

இன்று, தமிழ் நாட்டில் மூவேந்தர் ஆட்சி தளர்ந்த காலத்து முகமதியர், மராட்டியர் இடையிடை ஆண்டனர். தமிழ்ப் பண்பாட்டையும் மக்களையும் அழித்த முகமதியர்களை விரட்டியடித்துத் தமிழ்மக்களைக்காப்பாற்றிய தெலுங்கரும்சிறிதுகாலம் ஆண்டனர். இறுதியில் ஆங்கிலேயர்கள் ஆட்சி வேரூன்றியது. வலுப்பெற்ற அவர்களது ஆட்சியிலே பிறமொழிஆதிக்கம் நிலவி வந்ததால் தமிழ்மொழியின் தனிச் சிறப்பு அழிந்தது. அது மட்டுமன்று; மாற்றுந்தாயின் மோகமும் வலுப்பெற்றுத் தமிழ்ப் பண்பாட்டிலிருந்து தவறினர் மக்கள். தமிழ் வானம் இருள் சூழ்ந்தது என்பதை எடுத்துக் காட்ட வேண்டுகிறோம்.

இமயம் முதல் குமரிவரையிலும் தமது ஆணையைப் பரப்பி வெற்றிக்கொடி நாட்டி நாடாண்ட தமிழ் மன்னர்களின் மேம்பாட்டுடன் பிற்காலத்தில் தோன்றுதொட்டு அவ்வழியில், வீரத்தால் உயர்ந்து, வாழ்க்கையில் சிறந்து, பெரும்புகழுடன் நின்ற மூத்த குடிமக்கள் மறவர் குல மக்களேயாவர்.

இவர்கள் குறுநில மன்னர்களாய், பெருநிலக்கிழார்களாய், மக்களின் தலைவர்களாய், பேரவைப் பெருந்தலைவர்களாய்த், தமிழ்ப் பெருஞ் செல்வர்களாய் அருங் கலைஞர்களாய் செயல் வீரர்களாய், பெருநெஞ்சம் படைத்தவர்களாய், மக்களெல்லாம் மகிழ்ந்து போற்றும் வள்ளல்களாய் விளங்கி வந்தனர் என்று ஏடுகள் கூறுகின்றன. இது, அறிவும் பண்பும் கொடையும், கொள்கையும், குறிக்கோளும் குன்றாது தமிழ் வளர்த்த மாண்பும், இலக்கியம் கற்ற எவரும் நடுநிலைநோக்கோடு நூலாராயும் சான்றோர்களும் ஏற்றிப் போற்றும் பேருண்மையாகும்.

பொற்காலம் எனப்போற்றப்படும் சங்ககாலச் சிறப்பணைத்தும் பிற்காலத்தில் பெற்றுயர்ந்தது முகவை எனும் சேது நாடு. தென்னகத்துப் புலவரெல்லாம் போற்றி வாழ்ந்த திருவுடைய நாடு. திருத்தலங்களும், தெய்வப் பெரியார்களும் நிறைந்த நாடு. அம் மங்கல நாட்டினில் மறக்குல மாண்பு பெற்றுயர்ந்த மறத்தமிழன் மரபினிலே இருபதாம் நூற்றாண்டிலே பெரும் புகழ் ஈட்டித் தந்த சான்றோர் பலருள் மேதகு. பாண்டித்துரைத் தேவரும் ஒருவராவார்.

உருவிலே சிறந்தோராகவும், கருவிலே திருவுடையோராக வும் காட்சிதந்த மேதகு. பாண்டித்துரைத்தேவரவர்கள் கன்னித் தமிழாக்கம் பற்றிப் புதுப்புது எண்ணம்கொண்டு கண்ட கனவு களை எடுத்துக்காட்டுவதற்காகத் "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று தமிழ் கெழு கூடல் வையைக் கரையிலே பண்டு தமிழ் வளர்த்த பாண்டியர் போல், இனிய செந்தமிழ்ச் சங்கம் நிறுவினர். காலத்திற்கும், கன்னித் தமிழுலகிற்கும் பெருமை தந்தார். செயற்கரிய செய்வர் பெரியார்......!

முத்தமிழ் தந்து முழுவளம் பெற்ற தமிழகத்திலே. சங்கம் அமைத்துச் செந்தமிழ் வளர்த்துச் சிறப்புப் பெற்றது பாண்டி வள நாடாகும். அத்திருநாட்டிலே தமிழ்ப் பயிர்ச் செழிப் புற்றோங்கி வந்தது கூடல் நகரேயாகும். மூன்று தமிழ்ப் பேரவைகளின் சிறப்பிடமட்டுமல்ல, அவைகளின் பிறப்பிட மாகவும் இருந்ததல்லவா மதுரை!

"தென் மதுரை நகரின் முன் போற்றமிழ்ச் சங்கத் தாபனம் செய்தீரன்" என்றும் "முற்காலப் பாண்டியப் பேரரசர் களால் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது; இக்காலத்தும் அவ்வழிவழிவந்த பாண்டித்துரைத் தேவரவர்களாலேயே நான்காம் தமிழ்ச் சங்கமும் தோற்றுவிக்கப்பட்டது என்றும்" அறுபது ஆண்டுகள் அருந்தமிழ் சுவைத்துத்தமிழ் இலக்கியத் தின் தனிப்பெரும் பிரதிநிதியாக விளங்கிய மேதகு. உ. வே. சா. அவர்கள் கூறிய எடுத்துக்காட்டை அறியாதார் யார்?

கருவிலே திருவுடையோராகவும் கன்னித் தமிழ் பேணி கற்பகத்தருவாகக் காட்சிதந்து, மக்கள் உள்ளத்தில் இருளோட்டி அருள் வளர்த்த அப்பெருமகனுரைப் பாண்டித் துரை என்று அழைத்தது இலக்கிய உலகு.

சொற்சுவையும் பொருட்சுவையும் விளங்கிட நெஞ்சத் திரையின் நினைவு வடிவங்களைக் கணந்தோறும் எடுத்துக்காட்டி, நாற்றிசையும், நறுமணம் பரப்ப முன்னூல் என்றும், நன்னூல் என்றும், பாவலர் போற்றும் பன்னூல் தந்த பாவலனும், காவ லனும் பாண்டித்துரைத்தேவரைத் 'தேவர்' என்றே அழைத்தது



பூவேந்தராயும் புலமை நயமிக்க பாவேந்தராயும்
துவரத்துறந்த ஞானியின் தெளிவு பெற்ற
நற்றமிழ் வேந்தன்

**இராசா பாசுகர சேதுபதியவர்கள்.**

இத் தமிழ் உலகு. ஆயிரமாயிரம் ஆண்டு கழிந்தாலும், வற்றாது ஓங்கி, உயரும் முப்பாலும் பாருக்குத் தந்த திருவள்ளுவரும் தேவரன்றோ!

பாண்டித்துரைத்தேவர் என்றாலே இராசா பாசுகர சேதுபதியவர்கள் நம் முன் நிற்பார். உடலால் மட்டுமல்ல, உள்ளத்தாலும் ஒருவராய்க் காலத்தாலும் ஒருவராய் அவர்கள் இருவரும் விளங்கினர் என்பது மக்கள் கண்ட காட்சியாகும். சமய விளக்கேற்றி வைத்த சான்றோராவார் பாசுகர சேதுபதியவர்கள், கருங்கொண்டல் நாணும்படி அருளும் கொடை வள்ளலும் ஆவார்.

1893ஆம்ஆண்டு செப்டம்பர்த்திங்கள் அமெரிக்காவிலுள்ள கொலம்பியா நகரில் நடைபெற்ற அனைத்துலகக் கண்காட்சி உலக மக்களின் பொருட்செல்வத்திற்கு எடுத்துக் காட்டாகவும், சிக்காகோ மக்களின் அறிவூட்டும் அருட்செல்வத்திற்கு வழி கோலியதாகவும் அமைந்திருந்தது 'சிக்காகோ உலக சமயப் பேரவை'. அப் பேரவையில் பெரும் பங்கு கொண்டு பேசிய சுவாமி விவேகானந்தரின் பேச்சுக்களும், உரையாடல்களும், உலகமக்களுக்கு விடுத்த அழைப்பும், 'பேரவையை ஆட்கொண்டு விட்டார் விவேகானந்தர்' என்ற அமெரிக்க அறிஞர் மேதகு. அரியட்மன்றோ அவர்களது குறிப்புக்களும், 'சமயப் பேரவையின் பெருந்தலைவர் விவேகானந்தர்' என்ற 'நியூயார்க் எரால்டு' ஏட்டின் பாராட்டும் வரலாற்றுச் சிறப்புப்பெற்று விளங்குகின்றன.

இரண்டாண்டுகளுக்குப் பின் வெற்றி விருதுகளுடன் தாயகம் திரும்பிய விவேகானந்தர் முதன் முதலாகத் தமிழகம் வந்தார். அவர் கால் வைத்த இடம் பாம்பன். ஆங்கு வெற்றித் தூண் நாட்டி "சத்தியமே வெல்லும்" என்ற பொன்மொழியை அவ்வெற்றித் தூணிலே பதிய வைத்தவர் இராசா பாசுகரசேதுபதியவர்களேயாவர். 'சிவோஹம்' 'சிவோஹம்' என்று அவ் வெற்றித்தூண் முன் நின்று இன்பக் களிப்படைந்தவர் சுவாமி விவேகானந்தர். எனது வெற்றியின் சிறப்பெல்லாம் இந்த இராசரிசி பாசுகர சேதுபதியவர்களுக்கே என்று அருகிலே

இருந்த சேதுபதியவர்களைச் சுட்டிக் காட்டி, கடல் போல் முழங்கினார் விவேகானந்தர் என்பதைப் பாரதசக்தி மகா காவியத்தில் தீட்டியுள்ளார் கவி யோகியவர்கள்.

"சிகாகோ உலகச் சமயப் பேரவைக்கு வருமாறு தனக்கு வந்த அழைப்பிதழை ஏற்றுக் கொள்ளும்படியாக என்னை வலியுறுத்தி, இடையறாது என்னைத் தூண்டி, முழு உதவியும் கொடுத்து வழியனுப்பியவர் இப் பாசுகர சேதுபதியவர்களே. இதுவரை வெளியுலகு அறியாத துறவியாக இருந்த என்னை உலகம் அறிய, உலக ஞானியாக மாற்றியவரும் இப் பாசுகர சேதுபதியவர்களே" என்று நன்றிப் பெருக்குடன் எடுத்துக் காட்டியுள்ளார் சுவாமி விவேகானந்தரவர்கள்.

இத்தகு வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இராசா பாசுகர சேதுபதியவர்கள், தமது மரபு மறவாது சேதுபதியின் திருநாமத்தால் ஓர் உயர்நிலைப் பள்ளியை மதுரையிலே நிறுவினார்கள். அப்பள்ளியே இன்றைய வடக்கு வெளி வீதியில் உள்ள 'சேதுபதி உயர்நிலைப் பள்ளி' யாகும். தன் கனவைச் செயலாக உருவாக்கி, காலத்திற்கேற்ற கல்வியை ஆங்கு ஊக்குவித்த சேதுபதியவர்கள் மீண்டும் சிந்தித்தார்கள். அச்சிந்தனையில் தலையாய பங்கு கொண்டார் பெருந் தமிழமுதக் களஞ்சியமான, பாலவநத்தம் குறுநிலமன்னர் மேதகு. பாண்டித்துரைத்தேவரவர்கள். அச் சிந்தனைச் சிற்பியால் "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை" போல் காட்சியளிக்கின்றது மாமதுரையிலே எழிலுற விளங்கி வருகின்றது 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' என்ற இத்தமிழ்க் கோவிலாகும்.

'மறக்குடிப் பிறந்த மாண்புடையோரும்
சிறப்புடன் குழுமிய சீர்பெறு சபையில்' என்றவாறு தனித்தமிழால் உணர்வூட்டி, தமிழ் வளம் காட்டி, தமிழ்ச் சான்றோர் பலரைக் கூட்டி, அவர் தம் கருத்தூற கலங்கரை விளக்காக நின்று நிலவச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியை அடுத்திருந்த தமது பெரிய மாளிகையை அளித்தார் கொடைமறவோன் பாண்டித்துரைத்தேவரவர்கள். சிலையின்றி இன்பத்திருக்கோவில் உண்டோ! வாய்மைமிகு அவ்விலக்கியக்

கோவிலுக்குக் கதிரவனுய், வெண்ணிலவு நாண ஒளி விசி நாளும் மணக்கின்ருர் மேதகு. பாண்டித்துரைத்தேவரவர்கள். நாடுள்ள வரை, நற்றமிழ் ஏடுள்ள வரை அவர் புகழ் மறையாது, மங்காது என்பது தெளிந்த நல்லோர் பலரது கருத்தாகும். நாகூர் தர்கா வித்துவான் நாவலர் குலாம் காதிரு சாய்பு அவர்கள் 'தமிழ்ச் சங்கப் புலவராற்றுப்படை' என்ற தமது அரிய நூலில் பாராட்டியுள்ளார். கடைச் சங்க இறுதிக் காலப் பாண்டியன் உக்கிரப் பெருவழுதிப் பாண்டியனே நாம் காணும் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவிய மாறன் உக்கிரபாண்டியன் என்ற பாண்டித் துரைத்தேவர் என்று எண்ணினர் மக்கள். குன்ரு எழிலும், இளமையும் பொருந்தி நந்தமிழணங்குப்பல்லூழி வாழத் தமிழ்ப் பண்பாடு பெற்று, தமது முன்னேர்கள் பெருமைக்குச் சான்று கூறும் வண்ணம் தலையாயவராக விளங்கி வருகிருர் இன்றைய இராசா மேதகு. இராமநாதசேதுபதியவர்கள் எனப் பாராட்டுகின்றனர் மக்கள்.

"முதல், இடை, கடை என மூன்று தமிழ்ச் சங்கங்கள் தோன்றி மறைந்து விட்டன மதுரையில், கடல்கொண்ட சங்கச் செல்வங்கள் போக, எஞ்சிய நூல்களைப் பாதுகாக்க வேண்டும். பெரும் புலவருடன் நின்று விடக்கூடாது தமிழ், தமிழ்ப் புலவர் அனைவரும் இத் தமிழ்ச் சங்கத்தில் கூடித் தாய்மொழியை வளப் படுத்த வேண்டும், தமிழ்ப் புலமையூற்று அருவியாகப் பெருக் கெடுத்து தமிழ்ப்பயிரை நாடெங்கும் வளர்க்க வேண்டும், வருக புலவர்! தருக புரவலர்! உயர்க தமிழ்! என்று தமது உள்ளக் கருத்தினைச் சர்க்கரைப்பந்தலிலே தேன்மாரி பொழிந்தது போல தமிழ்ச் சங்கத்தொடக்க விழாவிலே புலவர்கள்மத்தியிலே வெளியிட்டார் மொழிவேந்தன் மேதகு. பாண்டித்துரைத் தேவரவர்கள் என்பதை அழகுறச் சான்று காட்டியுள்ளார் உழைப்பின் பெருமையை உணர்ந்த கவியோகி சுத்தானந்த பாரதியாரவர்கள்.

இரந்து வரும் புலவர்களுக்கு வரையாது வழங்கி, பாடி வரும் பாவலர்க்கு அவர் திறனறிந்து பரிசளித்து, எந்நாளும் புலவர் போற்ற, தாமிருக்கும் மாளிகையைத் தமிழுக்கீந்தும், தமது சொல்லாலும், செயலாலும் தமிழக அரசியல் துறையிலே

உறங்கிக் கிடக்கும் மக்கள் உள்ளங்களிலே உணர்வைத் தட்டி எழுப்பிய அவரது நாட்டுப்பற்றும், அஞ்சாத் துணிபும், வீரராய் மாற்றாராலும், மற்றவர்களாலும் மதிக்கப்பட்ட காவலன் பாண்டித்துரைத் தேவரவர்களது அறஞ்செயல்கள் இன்றைய இளந்தலைமுறையினர் நெஞ்சிலே நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், இனப்பற்றும், இறைப்பற்றும் ஊட்டுவதற்கு உறு துணையாகுமன்றோ!

நாட்டுக்கு நாவலராய், நந்தமிழ் ஏட்டுக்குக் காவலராய்க் கற்ற கவிவாணர்களுக்குத் தாயகமாய், நாளெல்லாம் நல்லணி செய்து, தேமதுரத் தமிழோசை திக்கெட்டும் பரவ நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவியது மட்டுமல்ல. 'சொல்லுதல் யார்க்கும் எளிய' என்ற தமிழ் மறையின்படி அரியநிலையில் சொல்லிய வண்ணமே நிருவிய தமிழ்ச் சங்கத்திலே 'பாண்டியன் நூலகம்' பரிவுடன் அமைத்து, திங்கள் ஏடாம் 'செந்தமிழ்' அமுதூட்டி, நூலாராய்ச்சியும், பதிப்பகமும் பாங்குடன் அமைத்தார் தேவரவர்கள்.

அது மட்டுமா?

மதுரைத் தமிழ்ச்சங்கமே முத்தமிழ்ப் பல்கலைக்கழகமாகத் திகழ வேண்டும் என்ற தமது உள்ளக்கருத்தை உலகறியச் செய்த தமிழ்மகனார், தமிழகப் பெருமகனார் வழியைப் பின்பற்றுவதே தமிழுக்குச் செய்யத் தக்கதோர் கடமையாகும். நன்றி மறவார் தமிழ் மக்கள். தோள் தட்டித் திரண்டெழுந்த பாவலர், நாவலர் பரிந்துரை வழங்குவர் என்பதில் ஐயமில்லை. அறம் வளர்த்து அன்னைத் தமிழுக்கு அணி செய்த வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள் அறிவுரையைப் பின்பற்றி நம் வாழ்வை அமைத்துக் கொள்ள அவர் தம் விழாவினைக் கொண்டாட வேண்டும் என்ற கருத்துச் சங்க ஆட்சிக்குழுவினர்பால் எழுந்தது.

அத் திருவிழாவைப் பெருவிழாவாகக் கொண்டாடத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் மேதகு. ஆர். செல்லத்தேவரவர்கள் சிந்தை கொண்டார்கள். தமிழ் அறிஞர்களுக்கு

அழைப்பு அனுப்பிக் கவிஞர்களையும், நாவலர்களையும் இங்கு குழுமச் செய்தார்கள். அதற்கு உறுதுணையாகச் சங்க ஆட்சிக் குழுவினரும் அரும் பணி ஆற்றினர். இவ்வாறு விழா மிகச் சீரும் சிறப்புமாக நடைபெறப் பணியாற்றிய சங்கத் துணைத் தலைவர் அவர்களுக்கும், ஆட்சிக்குழுவினருக்கும் எமது உளம் நிறை நன்றியை உரித்தாக்குகின்றேன்.

அவ்விழா வள்ளுவர் 2003 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 23, 24 (6, 7-1-73) ஆகிய இரு நாட்களிலும் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே. தமிழ்க் கருவூலமாக விளங்கி வந்த மேதகு. பாண்டித்துரைத்தேவரவர் களது பண்பினைப் போற்றிச் சொற்பொழிவு நிகழ்த்திய அறிஞர் பெருமக்களுக்கும், பாமாலை சூட்டிய பாவலர்கட்கும், அவை சிறக்க அரும்பணி புரிந்த நற்றமிழ் நண்பர்களுக்கும் எமது நன்றியறிதலைப் பணிவுடன் உரித்தாக்குகின்றேன்.

ஊர்கள் தோறும், தெருக்கள் தோறும், தமிழ் மன்றங்கள் தோறும், தமிழர் இல்லங்கள் தோறும், தமிழர் ஒவ்வொருவரும் அத்திருமகனின் திருநாளைப் பெருவிழாவாகக் கொண்டாடிப் புதிய சிந்தனையைத் தோற்றுவித்து, வளர்ச்சியுறத் தமிழ்ப் பணி புரிய ஆலவாய் அண்ணல் அருள்புரிவாராக.

'செந்தமிழ்' மார்ச்சுத் திங்களிதழ் பாண்டித்துரைத் தேவர் விழாச் சிறப்பு மலராக வெளிவருகிறது.

வாழ்க பாண்டித்துரைத்தேவர் திருநாமம், வளர்க அவர் வளர்த்த வண்டமிழ்! உயர்க அவர் நிறுவிய நான்காம் தமிழ்ச் சங்கம்.

இவண்,

அன்புசால்

**ஆ. ஆண்டியப்பன்,**

விழா அமைப்பாளர்.

# இரங்கற்பா.

" உலகாதி யந்தம் வணங்கு மொப்பில்லாப்
புலவனே நாந்துயரப் போனய் — பலகாலு
நீயொழிய வென்சொல்வோ நீயொழிய வென்செய்வோ
நீயொழிய வென்னிற் போம்யாம்.

நுண்சங்கு விசுநுரைத் திரைகண் மேய்ந்தமழை
கண்ணின் மணிபோற் கரியனவாய் — விண்ணி
லெதிரவந்த செவ்வெயிலோ டெங்கு மிருளாய்
மதிலா மாய்ந்த தென,

செந்தமிழ்நாட் டெல்லாருஞ் சேர்ந்தேற்று மாமகனே
தந்தபுகழ் விட்டுத் தவறினையோ — வந்த
விருவினையும் வென்று கடந்திலையே லின்னும்
பெருநலஞ் செய்வாய் பிறந்து."

(மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினரும், பிரெஞ்சு நாட்டுப் பேராசிரியருமான அறிஞர் ஜூலியன்வின்சன் (Professor JULIEON WINSON) அவர்களால் பாடப்பட்டவை)

(30 மார்ச்சு—1912)

தொகுப்பு: ஆ. ஆ.

# தொடக்க விழாத் தலைமைப் பேருரை.

வழக்கறிஞர் **ஆர். செல்லத் தேவர்** அவர்கள்

*(துணைத் தலைவர், தமிழ்ச் சங்கம், மதுரை)*

விழாவிற்கு வந்திருக்கும் பெரியோர்களே, தாய்மார்களே, தமிழ் அறிஞர்களே! அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும் நன்றியையும் கூறுகின்றேன்.

இவ்விழா வள்ளல் பாண்டித்துரைத்தேவர் அவர்களின் 105-வது ஆண்டு விழா. புலவர்களும் பொதுமக்களுமாகிய நீங்கள் இங்கு கூடியிருக்கின்றீர்கள். இன்று புலவர்கள், பொது மக்கள் ஆகியோரது தொடர்பு தமிழ்ச் சங்கத்திற்கு மிகவும் தேவை. ஆனால் அது, போதிய அளவு இல்லை. இச்சங்கம் 1901–ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. சற்றேறக்குறைய முக்கால் நூற்றாண்டை எட்டிப்பார்க்கும் நிலையில் இச் சங்கம் இன்று விளங்குகின்றது. ஆயின் தேவையான வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய நிலையில் இது இல்லை. இங்கிருக்கும் குறைபாடுகளை நீக்கவும், தமிழ்ச்சங்கம் பண்டு போல் மீண்டும் ஆக்கமும், ஊக்கமும் பெறவும் புலவர்களையும், தமிழ் அறிஞர்களையும் இங்கு வரவழைத்து விழா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தோம். பொது மக்களுக்குத் தமிழ்ச்சங்கத்தோடு தொடர்பு ஏற்படுத்துவதற்காக இங்கு இவ்விழாவில் அனைவரையும் கூடச் செய்துள்ளோம்.

இத்தமிழ்ச் சங்கம் தொடங்கப்பெற்ற அன்று ஆங்கில மோகத்தால் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. அத்தகைய காலத்தில் ஆங்கிலேயர்களின் எதிர்ப்புகளுக்கிடையில், இத்தகைய தமிழ்ச்சங்கத்தைத் தோன்றச் செய்தார்கள்.

இம் மாபெரும் செயல் வள்ளல் பாண்டித்துரை அவர்களின் தமிழ்ப்பற்றையும், தொண்டுள்ளத்தையும் நமக்குக்

காட்டுகின்றது. அக்காலத்தில் குறுநிலமன்னர் பலர் இருந்தனர். அவருள் எவரும் இப்படிப்பட்ட பெரியதொண்டினையோ, தமிழ்ப் பணியையோ செய்தாரில்லை.

1901-ஆம் ஆண்டு இச்சங்கத்தைத் தோற்றுவித்த மன்னரவர்கள் இச்சங்கம் நிலையாக நின்று நற்றமிழ்ப் பணியாற்ற இன்று நமது நினைவில் இருக்கும்படிப் பல இலட்சம் பொன் பெறும் இப்பெருமாளிகையையும், விலை மதிப்பிட இயலாத இங்குள்ள நூலகத்தையும் நமக்குத் தந்தருளினார்கள். ஆனால் அவ்வாறு செந்தமிழ் காத்த மன்னர்கள் எல்லாம் காலமாகி விட்டார்கள். மன்னர்கள் காலமும் இன்று மறைந்து விட்டது. 'எல்லோரும் இந்நாட்டுமன்னர்' என்ற காலம் தோன்றியுள்ளது.

அன்று தமிழ் காக்கப் புலவரும், அவர்களைக் காக்கப் புரவலரும் இருந்தனர். இன்று மக்களாட்சி நடைபெறுகின்றது. தமிழை இன்று மக்கள் தான் காக்க வேண்டும், வளர்க்க வேண்டும். எனவே, தமிழ்ச் சங்கம் பண்டு போல் இன்றும் உயர்நிலை அடைய வேண்டும். அதற்குப் பொதுமக்களாகிய நீங்கள் தான் சொல்லாலும், பொருளாலும் தமிழ்ச்சங்கத்திற்கு உங்கள் நல்லாதரவைத் தந்து உதவ வேண்டுகின்றேன்.

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்,
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்,
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்,
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!" (கவி-பாரதி)

அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடை பெறுகிறேன்.




நாடெங்கும் தமிழ்ப் பயிர் வளர்த்த நான்காம் தமிழ்ச் சங்கத் தொண்டினைச் சால்புறச் செய்யும் துணைத் தலைவர் **ஆர். செல்லத்தேவர்** அவர்களுக்கு பொன்னுடை போர்த்துகிறார் அருந் தமிழ்த் தொண்டன் **ஆண்டியப்பனார்**



தண்பாண்டியன் தலைநகராம் மாடமதுரைத் தமிழ்ச் சங்க விழாவில் தொடக்கப் பேருரை ஆற்றிய மாநிலக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் மெ. **சுந்தரம்** அவர்களுக்குப் பொன்னுடை போர்த்துகிறார் தமிழ்த் தொண்டன்

# விழாத் தொடக்கப் பேருரை.

டாக்டர் **மெ. சுந்தரம்** அவர்கள்
*பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.*

நான்மாடக் கூடல் என்னும் இம்மதுரை மாநகரில் தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்நான்காந் தமிழ்ச் சங்கத்தினைத் தோற்றுவித்தவரின் 105-வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்கும், தொடக்கவுரையாற்றுவதற்கும் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். நான்மாடக்கூடல் எப்பொழுதுமே சுறு சுறுப்பிற்கும் வெப்பத்திற்கும் சிறப்புப் பெற்றது. தமிழன் எப்பொழுதுமே காலதாமதமாகத்தான் எதையும் தொடங்கி வைப்பான், அது எப்பொழுதும் நிலைத்து நிற்கும். அதைப் போல் காலதாமதமாகத் தொடங்கப்பெற்ற இவ்விழாவின் சிறப்பும், சுவையும் போகப் போகத் தான் புரியும். தமிழ் ஆட்சி கால தாமதமாகத்தான் வரும், ஆனால் நிலைத்து நிற்கும்.

தலைவர் அவர்கள் கூறியதுபோல முக்கால் நூற்றுண்டுக்கு முன் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றுங் கொண்டு,

"பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்ற நாலடியாரின் மொழிக்கொப்ப தோற்றுவித்து நாட்டுப் பற்றின் மங்கல நாதத்தையும் அதற்கும் மேலாக இந்து மதத்தின் சிறப்பையும்வலியுறுத்துமாறு, அஞ்ஞானத்திற்கும் மெய்ஞ் ஞானத்திற்கும் உள்ள வேறுபாட்டினை வலியுறுத்திய விவேகானந்தரின் ஊக்கத்திற்கு உதவியாய் இருந்த பாண்டித்துரையாரின் விழாவினைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

எனக்குப் பாண்டித்துரையாரின் நினைவு வரும்பொழுது பாரதிதாசனையும், பாரதியாரையும் தான் நினைக்கத் தோன்று கிறது. இவர்கள் இருவரும் வீரத்திற்குப் பாண்டியனைத்தான் போற்றுவார்கள். பாரதியார், ஒருவனின் வீரத்தினைப் பாராட்டுவதற்காக "சபாஷ் பாண்டியா" என்று கூப்பிடுவாராம். புதுச்

சேரிக்குப் "பாரதியார் விழா" வில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன். பாரதியார் அவர்கள் 'சபாஷ் பாண்டியா' என்னும் வாசகத்தை இங்குத் தான் தோற்றுவித்தார் என்று புதுச்சேரி மக்கள் கூறினார்கள்.

பாண்டியனின் சிறப்பு இந்த 20-ஆம் நூற்றாண்டில் சிறப்புப் பெறுவதற்குக் காரணமானவர் பாரதியார் தான். அதற்கடுத்து பாரதிதாசனும் அழகாகப் பாடியிருக்கிறார்.

'அன்று ஆண்ட ..................... பாண்டியன் செந்தமிழ் மீண்டும் வந்தது போல்' என்று பாடினார். இப்பாடலுக்கு அகச்சான்றும், புறச்சான்றும் உள்ளதா? இப்பாடலை யாரைப் பார்த்துப் பாடியிருப்பார் என்ற ஐயம் எழும்போதெல்லாம் எனக்குப் பாண்டித்துரைத்தேவரின் நினைவு வரும். இவ்விழா வில் அமைக்கப்பட்டுள்ள பாண்டித்துரையவர்களின் படத்தைப் பார்க்கும்பொழுது அவர் 'தமிழின் திருவுருவம்' என்று நினைக்கத் தோன்றுகிறது. ஏறத்தாழ இந்தக் கருத்தைக் கொண்டு தான் பாரதிதாசனும் அந்தப்பாடலைப் பாடியுள்ளார் என்று தோன்று கிறது.

தமிழ்ப்பற்றுக் கொண்ட அந்த நெஞ்சம், கருணை உள்ளம் ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக்கு முன்னர் இத்தமிழ்ச் சங் கத்தைத் தோற்றுவித்தது. எத்தனையோ இலக்கண நூற்களை யும், இலக்கியச் சான்றுகளையும் நாம் பார்த்திருக்கிறோம் படித் திருக்கிறோம். ஆனால், இந்த மணிமண்டபத்தில் தொடங்கப் பட்ட இலக்கிய ஆராய்ச்சி சிறப்பாக நடைபெற்றது. அப் பொழுது ஆராய்ச்சியின் ஒரு பக்கம் அரசன் சண்முகனாரும், இன்னொரு பக்கம் இரா. இராகவையங்காரும்; ஒரு கட்சியில் கந்தசாமிக் கவிராயரும் இருந்து ஈடுபட்டார்கள். எல்லோரும் வீற்றிருக்கும்பொழுது அரசன் சண்முகனார் 'இறைச்சி வேறு' உள்ளுறை உவமம் வேறு' என்று கூறினார். உள்ளுறை உவமம் கருப்பொருளுக்கு உள்ளேயே தோன்றியது, இறைச்சியானது வினை, காலம் போன்ற ஐந்து பொருள்களுள் தோன்றுவது என் றார். அதை எதிர்த்த கந்தசாமிக் கவிராயர், அத்தகைய வேறு பாடு எதுவும் கிடையாது; இறைச்சி என்பதற்கு உணர்வு பிரி தல் என்று பெயர். உள்ளுறை என்பது 'உள்ளே உறைந்து கிடக்கும்' என்று பொருள்படும் என்றார். இயங்குதலையும். இயங்

காத்தலையும் வேறுபாடு சொல்லி, 'கலித்தொகை .எறிந்த கல்' உதாரணமும் காட்டினர். பிறகு இறைச்சிக்கும், உள்ளுறை உவமத்திற்கும் அத்துணை வேறுபாடு கிடையாது, உண்டு எனக் கொண்டாலும் அத்துணை வாய்ப்பில்லை என்ற முடிவுக்கு வந்தனர். அரசன் சண்முகனுர், இம்முடிவிற்காகத் தலையை அடமானம் வைக்கிறேன் என்று கூறிர மணிமண்டபம் இங்கு உள்ளே இருக்கின்றது.

மற்ருேர் ஆராய்ச்சி ஆகு பெயருக்கும், அன்மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாடு காண்பதாகும். அதிலே பண்டிதமணியும், மற்ருெரு பக்கம் அண்ணுமலைப் பல்கலைக் கழகப் புலவர் கந்தசாமியாரும் ஆகிய இரண்டு பெரும் புலவர்கள் பலமாகவே விவாதித்தார்கள். பண்டிதமணி இந்த அறப் போருக்கு நாம் தயாராக இருந்திட முடியும் என்ருர். மூன்று போனுலும் ஐந்து இருக்கிறதென்ற நிலையில் அடையத் தயாராக இருக்கின்ருேம் என்று சொன்னுர்கள், அந்த அளவிற்கு இலக்கண ஆராய்ச்சி எதிரொலித்த மணிமண்டபம் உள்ளே இருக்கிறது. இதில் இருக்கின்ற ஒவ்வொரு செங்கல்லும் தனித்தனி இலக்கியச் சிறப்பு வாய்ந்தது. இதே மண்டபத்தில் வேறு சில பேச்சுக்களும் நடந்திருக்கின்றன. இந்தத் தமிழ்ச் சங்கம் சேது காவலர்கள் பாதுகாவலில் வளர்ந்தது. சேதுகாவலர் அந்தக் காலத்தில் முடிசிறந்து செங்கோல் செலுத்தியகாலம், அத்தாணி மண்டபத்தில் இருந்து புலவர்களுக்குப் பரிசு வழங்கிய காலம்.

பண்டிதமணி, அரசன் சண்முகனுர் போன்ற தமிழ் அறிந்த சான்ருேர்களையும், கந்தசாமிக் கவிராயர், இராகவையங்கார் போன்ருேர்களையும் இம் மணிமண்டபத்தில் வைத்து அழகு பார்த்து அணி செய்து, தாயைப்போலத் தாலாட்டிச்சீராட்டிப் பாதுகாத்தபெருமை இந்தத்தமிழ்க்கோமகன் வள்ளல்பாண்டித் துரைத் தேவர் அவர்களைச் சாரும்.

இந்த மணிமண்டபம், இலக்கண ஆராய்ச்சியும், இலக்கிய ஆராய்ச்சியும் கொண்டு பூத்துக் குலுங்கி மணம் கமழவேண்டும். தமிழண்ணல் தம் தாலாட்டுப் பாடலிலே

'தொட்டால் துலங்கும் தோட்டம் பொலிவேறும்,
வைத்தால் விளங்கும் வாழை பயிரேறும்'

என்று குறிப்பிட்டுள்ளார். அதைப்போல் பாண்டித்துரை அவர்கள் காவலராகவும், கைவண்ணம் பொருந்திய கணம், ராசிக் கணம்; செட்டி நாட்டிலே' " கப்பல் முகம் போனார்க்கு .......' என்று கூறுவது போன்ற ராசி உடையவராகவும் இருந்தனர், ஆகவே அந்தக் கைவண்ணம் முகவண்ணம் இந்த நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவி இருக்கிறது. அப் பெருமகன் தொடங்கிய பணி இன்னும் வளர வேண்டும், தமிழ் எங்கும் பரவ வேண்டும் என்பதே அவரது ஆசை.

தமிழ், உயர் தனிச் செம்மொழி, உயர்ந்த மொழி, தனி மொழி. பாவணர் கூற்றிலே கூற வேண்டுமானால் (" The Primary Classical language of the world" ) 'உலக முதன்மை உயர் தனிச் செம்மொழி' என்று சொன்னார்கள். பாண்டித்துரையார் கனவு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று இனப்பற்று நமக்கும் வேண்டும் என்பதே ஆகும். இந்தப் பற்று நாட்டிலே வளரவில்லை.

இவ்விழா பாண்டித்துரைத்தேவர் அவர்களின் 105-வது ஆண்டு விழா. இந்த விழா ஆங்கிலத்திற்கோ, இந்திக்கோ வந்திருந்தால் ஊரே திருவிழாக்கோலம் கொண்டிருக்கும். மதுரையில் திருவிழாவிற்குக் குறைவே கிடையாது. இதே நூற்றாண்டு விழா வேறு மொழிக்கோ, வேறு மொழிப் பெருமகனுக்கோ வந்திருந்தால், கற்பனையிலே பாருங்கள் நாடு எப்படி இருக்குமென்று. அந்தப் பெருமகன் கண்ட கனவு நனவாக வேண்டுமென்றால் செந்தமிழிலே கூறியபடி புலவரவை இங்கு கூட வேண்டும். அந்தக் காலத்திலே பார்த்தால் நாவலர் கணக்காயர் சோமசுந்தர பாரதியார் தொடர்பு கொண்டு சங்கத்துக்கு நன்மை செய்திருக்கிறார்கள்.

பல ஆண்டுக்காலம் டாக்டர் சோமசுந்தர பாரதியாரும், இராகவையங்காரும் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். அந்தக் காலத்துச் 'செந்தமிழ்' இதழைப் பார்த்தால் தெரியும், எப்போதுமே ஆராய்ச்சிக் கட்டுரைகள் தான். 'சிலம்பு நெறி நோன்பு பற்றி'ச் செந்தமிழில் கட்டுரை எழுதியிருக்கிறார்கள். சிலம்பு நோன்புக்குக் குறுந்தொகையும், ஐங்குறுநூறும் சான்றாக இருந்திருக்கின்றன, சோமசுந்தர பாரதியாரின் தொல்காப்பிய ஆராய்ச்சியும் நடந்திருக்கிறது.

'அட்டையாடல்' என்பது பற்றி ஆராய்ச்சி நடந்திருக்கிறது. 'அட்டையாடல்' என்றால், ஒரு அட்டையினைப் பல கூறாக வெட்டினாலும் ஊர்ந்து கொண்டே போகும். அதுபோல் வீரர்களின் உறுப்புகளை வெட்டினாலும், துள்ளி விளையாடும், வீரம் போகாது, என்று அட்டையாடலைப் பற்றி சோமசுந்தர பாரதியார் கூறியிருக்கின்றார். இதை ஏன் சொல்லுகின்றேன் என்றால், இத்தமிழ்ச் சங்கம், இலக்கண, இலக்கிய ஆராய்ச்சி செய்து வந்திருக்கின்றது. அந்த அழகான அத்தாணி மண்டபம் இன்று பொலிவற்று இருப்பது வருந்தத்தக்கது. தலைவர் அவர்கள் அழகாகச் சொன்னார்கள், பொதுமக்களுக்கு ஆர்வம் குன்றி இருக்கிறது என்று. வரவேண்டிய உணர்ச்சி வந்தால் வர வேண்டிய நேரத்தில் இலக்கியமும் வளரும். இலக்கணமும் வளரும். நமக்கு இன்னும் இனப்பற்றே வரவில்லை, மொழிப்பற்றே வரவில்லை. இந்த இரண்டும் பாண்டித்துரைப் பெருமகனார் கண்ட தலை சிறந்த பற்றுக்களாகும்.

நம்முடைய பெருமையெல்லாம் சங்க இலக்கியத்திலே பார்த்தால் தெரியும். அர்த்த சாத்திரத்திலே பாண்டியனுடைய முத்தின் சிறப்பு கூறப்படுகிறது. கடலிலே மூழ்கி எடுத்த முத்தைப் பார்த்தால் ஒன்று அரசாகவும் ஒன்று சாதாரண முத்தாகவும் இருந்திருக்கின்றன. அந்த முத்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகி இருக்கின்றது. பாண்டிப் பெருமுத்துப் போல சிறப்படைந்தவர் பாண்டித்துரைப் பெருமகனார். அவரின் சொல்லுக்குள்ள வலிமையைப் போல, செயலுக்கும், சிந்தனைக்கும் வலிவிருந்திருக்கிறது. அந்த உரிமைமுத்தை அதிகமாக மக்கள் பயன் படுத்திக் கொள்ளவில்லை.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தை 'Deemed University' என்று சொல்லவாய்ப்பிருக்கிறது. சென்னையில் 'தக்கண பாரத இந்திப் பிரச்சார சபை' இருக்கிறது. அது இரண்டு கோடி ரூபாயில் Deemed University ஆக பல்கலைக் கழகத்திற்கு இணையாக இருக்கிறது. அங்கு கொடுக்கும் பட்டத்தைப் பதினான்கு பல்கலைக் கழகங்களும் ஏற்றுக்கொள்கின்றன. Deemed University என்றால் பட்டம் கொடுக்கலாம், ஆராய்ச்சிக்குப் பட்டம் அளிக்கலாம். அதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்கிறது. மேலும் இந்திய அரசு மானியம் கொடுக்கிறது. அந்த Deemed University என்பதை இந்திக்கு மட்டுமல்லாது வடமொழிக்கும் கொடுத்திருக்

பொறுத்தவரையில் இலக்கண இலக்கியம் சிறக்க பழைய மரபைத் தவருது போற்ற வேண்டும். தமிழின் பண்பாடு, மரபு மிகச் சிறப்புற்றவை ஆகும். பழமையிலே புதுமை காண வேண்டும். பாண்டித்துரையார் அதன்படியே செய்தார்.

தமிழுக்கே சிறப்பு மரபு தான். 'செம்மாந்திருத்தல்' என்பதற்குத் தேவை மரபு தான். தமிழ்நாடு சிறந்த நாடு. தமிழில் இலக்கியம் நல்ல கொள்கைகளை உருவாக்குகிறது. சமயம் சிறந்திருக்கிறது. சமயக் கொள்கை வேறு. மூடநம்பிக்கை வேறு. சமயக் கொள்கை ஏற்கலாம் அதில் மூடநம்பிக்கை தேவையில்லை. தமிழினம் தாழக்கூடாது. மூடக்கொள்கை கூடாது. ஆனல் தமிழ் இலக்கியம் தேவை. சமயக் கொள்கை இருக்கலாம், அதில் மூடநம்பிக்கையை ஒழித்து விட்டு ஏற்கலாம். தமிழினம் வளர வேண்டும், தமிழ்நாடு சிறக்க வேண்டும்.

பாண்டித்துரை கண்ட கனவு, சங்க இலக்கியத்திலிருந்து ஊற்றூகி, அதிலிருந்து புது இலக்கிய நோக்குத் தோன்றி வளர்ந்திருக்கின்றது. எனவே ஒரு நாட்டுக்கு இனப்பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று தேவை. அதைப் பாண்டித்துரையாரவர்கள் உருவாக்கியிருக்கிறூர்கள்.

நடுவண் அரசு முடியுமானல் தமிழ்ச் சங்கத்தை Deemed University யாக மாற்றவேண்டும். இந்திப் பிரச்சாரசபா (Deemed University) தமிழ்நாட்டில் ஒன்று இருக்கிறது. ஆனல் வட நாட்டில் ஏழெட்டு இருக்கின்றன. எனவே Deemed University யாகத் தமிழ்ச் சங்கத்தைத் தமிழ் மொழிக்காக ஆக்கலாம். இதற்குரிய ஏற்பாட்டைத் தலைவரவர்கள் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

# இரங்கற்பாக்கள்

கூமாம்பட்டி மேதகு. கந்தசாமியார் பாடியவை. (செ. 10)

திருமகளுறையுங் கூடன்மாநகரிற் செந்தமிழ்ச்சங்கம்-
வைத்ததனி
லொருவுருப் புலவர் தமக்கு முன்னிறையாயுற்ற நீவான
நாடேகிப்
பொருவிலாத்தமிழின் சங்கமுமீறுவிப் பொன்னகர்ப்
புலவர்க்குமிறையா
மருவவோவுயர் பாண்டித்துரை சென்ருய்மன்னிய
வெங்களையகன்றே.

சைவமணியே தவமணியே சங்கம்வளர்த்த தனிமணியே
தெய்வமணியே சீராச திலகமணியே தமிழ்ப்புலவ
ருய்யவுதித்த வொருமணியே யுமையோர்பாகன் கழலிணையை
யெய்துங்கால மிதுவே யோவிசையாய் பாண்டித்துரை மணியே

இத்தரையிற் றமிழோங்க வெழிலாருஞ் சித்தாந்த சைவமோங்க
வுத்தமர்கள் குலமோங்க வொண்புலவர் தனியோங்க வொளிசேர்
நீறும்
பத்தியுறு கண்டிகையு மணிந்து விதிப்படி பூசைபண்ணி
ளத்தியுரியரனடியை யடைந்தனை பாண்டித்துரையேயருட்
கோமானே.

கல்லுருக மரமுருகக் கல்லாதார் மனமுருகக் கழகந்தன்னிற்
செல்லுருகப் பிரசங்கம் பொழிவாயாலொரு மொழியுஞ்
செப்பிடாம
லல்லுருக மதியணியு மண்ணலடி நீழலதனி லமர்ந்தா யன்பர்
சொல்லுருகல் கண்டிலேபே சுவைமுதிருந் தமிழ்ப்பாண்டித்
துரைக்கோமானே.

கண்டிகைக்கல னேகலனெனப் பூண்டுகண்ணிய நீறுறுவதன
மண்டலவழகு மின்னுரை கூறிவருந்தி வந்தவர்க்கருள் கரமுங்
கொண்டுவானே கியவணுறு தேவர்குழாத்தினுக் கீகையுமான் பாற்
றெண்டுவிவிதமும் பயிற்றவோ சென்ருய் தூயபாண்டித்துரைக்
கோவே.

# தொடக்க விழாச் சிறப்புச் சொற்பொழிவு.

திருமிகு கந்தசாமிப் புலவர் அவர்கள், மதுரை.

அன்புசால் அவைத் தலைவர் அவர்களே! அருந்தமிழ்த் தொண்டன் ஆண்டியப்பனார் அவர்களே! பேராசிரியப் பெரு மக்களே! பெரியோர்களே! அனைவருக்கும் வணக்கங்கள் பல.

வள்ளல் பெருமான் பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் 105வது ஆண்டு நிறைவு விழா நடக்கிறது இன்று. நான் பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் அன்பளிப்பாலே இத் தமிழ்ச்சங்கத்தில் படித்தேன். நல்ல நூல்களைக் கொண்டு என்னை மனிதனாக்கிய இடம் இந்த இடம். 1936--38 ஆகிய இரண்டு ஆண்டுகள் இங்கே படித்தேன். வேங்கடசாமி நாட்டார் அவர்களும் தமிழ்ச் சங்கத்தின் மாணவரே. மேலும் எத்தனையோ பெரும் புலவர்களை உருவாக்கியது இத்தமிழ்ச் சங்கம்.

கோபாலய்யர் என்பவர் தமிழ்ச்சங்கத்தின் தலைமாணவர். நாராயணசாமி அவர்களும் இங்கே படித்தவரே. நாராயண சாமியை வளர்த்த பெருமை நாராயணய்யங்காரைச் சேரும். இவர்களை ஊக்குவித்த பெருமை தமிழ்ச்சங்கத்தினுடையது என்பதை மறந்துவிடக்கூடாது. இத்தகைய தமிழ்ச்சங்கத்துத் தேர்வை நிறுத்திவிட வேண்டும் என்று கூறுகிறார்கள், அவர்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இங்கு தமிழாசிரியர் மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் தமிழ்ச் சங்கத் தேர்வு ஏன் நடத்த வேண்டும்? என்ன தகுதி இருக்கிறது' என்றெல் லாம் பேசினார்கள். இதற்கிடையிலே நான், 'தமிழ்ச் சங்கப் புலவர்களில் எவர் குறைபாடு உடையவர்'? என்று கேட்டேன். 'தமிழ்ச் சங்கத்திற்குப் பட்டங்கொடுக்கத் தகுதி இல்லை என் றால் வேறு எந்தப் பல்கலைக் கழகத்திற்குத் தகுதி உண்டு' என் றும் கேட்டேன். 'வேலையில்லா நிலைமை என்கிறீர்களே. ஏன் எத்தனை தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன; அவற்றில்

தமிழாசிரியர்களை நியமிக்கலாமே' என்றேன். அதனால், தமிழ்ச் சங்கத்திற்கு எல்லாத் தகுதியும் உண்டு எந்தக் குறையும் இல்லை என்று சொன்னேன்.

'தமிழாசிரியர்களை உயர்நிலைப் பள்ளிகளில் அதிகமாக நியமிக்க வேண்டும். மேலும் அரசு அலுவலகங்களிலும் புலவர்களை வேலையில் அமர்த்த வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் படித்தவர்களுக்கு அரசுப் பணியாளர் வேலை தருகிறீர்களே, உயர்நிலைப் பள்ளிப் படிப்பும், புலவர் படிப்பும் படித்தவரை ஏன் அரசு நிர்வாகத்தில் பணியாளராக்கக் கூடாது? என்றேன். அரசு நிர்வாகத்தில் இவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்; கேட்டுப் பெற்றால் உதவியாய் இருக்கும், சிறப்புமாகும்.

பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திற்கு வழிகாட்டி மதுரைத் தமிழ்ச் சங்கப் பாடத் திட்டம் என்பதை மறந்துவிட முடியாது. பாண்டித்துரைத் தேவர் அவர்கள் சிறந்த தமிழ்ப் புலவர்களைக் கொண்டு, தேர்ந்து சிறந்த பாடத் திட்டத்தைப் புலவர் வகுப்பிற்கு அமையச் செய்தார்கள். செய்யுளியற்றல் என்ற பகுதியும் தமிழ்ச் சங்கப் புலவர் வகுப்புக்கு வைத்தனர். பிரவேசத்தில்—வெண்பா, ஆசிரியப்பா. பாலபண்டிதத்தில்—கலிப்பா, வஞ்சிப்பா. பண்டிதத்தில்—பாவும், பாவினமும் என்ற முறையில் செய்யுள் இயற்றக் கற்றுக் கொடுத்தார்கள். ஆகவே, பலதுறையான தகுதியும் ஏற்படுவதற்குத் துணை நின்று ஏற்பாடு செய்தவர் பாண்டித்துரைப் பெருமகனார். அவர் இல்லையானால் இன்று நாம் பேசுகின்ற "தமிழ்" இல்லாமல் போயிருக்கும்

முதல் மூன்று சங்கங்கள் பாண்டிய மன்னர்களால் வளர்க்கப்பட்டு, இருந்து வளர்ந்து, பின்பு அழிந்தன. அதற்குப்பிறகு 2000 ஆண்டு இடைவெளிக்குப் பின் பாண்டித்துரையார் இச்சங்கத்தை ஏற்படுத்தினர். தலைச்சங்கம் நிலைநிறுத்திய பாண்டியன் — காய்சின வழுதி ஆவான். இடைச் சங்கம் — யாரென்று தெரியவில்லை. கடைச்சங்கம் — மூடத்திருமனார். அதற்குப் பிறகு இந்த நான்காம் சங்கம் நிறுவி நிலைபெறச் செய்தவர் பாண்டித்துரைப் பெருமகனார். தமிழ் வரலாற்றில்

தமிழ்ச் சங்கத்தில் பாண்டி மன்னர்கள் இடம் பெறும்போது நான்காம் சங்கப் பாண்டித்துரையவர்களும் இடம் பெறுவார்கள். நாம் பாண்டித்துரையவர்களை மறந்தோமானால் ஒரு நாளும் நாட்டு வளர்ச்சி இன வளர்ச்சி ஏற்படாது. எனவே பாண்டித்துரையவர்களின் உருவத்தைப் பார்த்துப் பார்த்து அவரை நினைத்து நினைத்து தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்.

நான் மகாராட்டிரத்திற்குச் சென்றிருந்த போது (பூட் பாலிசு போடும் பையன்) செருப்புக்கு மெருகேற்றுபவன் புகை வண்டி நிலயத்தில் இருந்தான். 'யாரப்பா நீ' என்றேன். 'மராட்டா கூம்' என்றான். அதாவது மராட்டியன் என்றான். அப்போது அவன் மார்பு விரிவடைந்தது கண்டு நோக்கினேன். பிறகு வீர சிவாசியின் படத்தைக் காண்பித்தான். அவ்வளவு நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் அவனிடம் கண்டேன். அதுபோன்று துரையவர்கள் படத்தைத் தமிழன் ஒவ்வொரு வரும் தமது சட்டைப் பையில் வைத்துப் பார்த்து, வணங்கிப் பெருமைப்பட வேண்டாமா? அவர் தானே தமிழ் வளர்த்தவர், அவரை நினைக்க வேண்டாமா? என்று நினைத்தேன் வருத்தப் பட்டேன். கண்ணீர் சிந்தினேன். ஏனென்றால் நாம் நம்மை நினைக்கும்படித் தமிழை நினைக்கும்படி, உலகமே தமிழை நினைக் கும்படிச் செய்தவர் பாண்டித்துரையாரல்லவா?


ஒரு பட்டதாரி ஆண்டியப்பனைப்பார்த்து "பாண்டித்துரை விழா, பாண்டித்துரை விழா" என்று சொல்கிறீர்களே என்ன என்று கேட்டாராம். அந்தப் பட்டதாரி பாண்டித்துரையைப் பற்றி அறியவில்லை என்று சொன்னால் வருத்தமாக இருக்கிறது. என்ன கொடுமை?

இன்றைய மாணவர்கள் அனைவரும் ஒரு முறையாவது தமிழ்ச் சங்க வீதியிலே போக வேண்டும்; தமிழ்ச் சங்கக் கட்டிடத்தைப் பார்க்க வேண்டும். தமிழ்ச் சங்கத்தின் உள்ளே செல்ல வேண்டும், அதன் பெருமை உணர வேண்டும். அங்கு இருக்கும் தமிழ்ப் பெரியார்களைப்பற்றி உணர வேண்டும். அங்கு

இருக்கும் தமிழ் ஏடுகளைப் பார்க்க வேண்டும். மரப் பெட்டகங்களைக் காண வேண்டும். ஆகா! இது தமிழ்ச் சங்கம், நம்மை வளர்ப்பது புகழ் சேர்ப்பது என்பதை உணர வேண்டும் என்று மாணவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். கழுத்தைப் பிடித்துத் தள்ளுவார்களோ என்று நினைக்க வேண்டாம். அப்படியே வரும் வழியில் சண்டைக்கு யாரும் வந்தால் ஐயா நான் தமிழ்ச் சங்கத்துக்குப் போகிறேன் என்று பெருமையோடு சொல்லலாம்.

பாண்டித்துரைச்சாமித் தேவரின் பெயரால் இங்கே அகன்ற தெரு பெரிய தெரு ஒன்றினுக்கு ஏன் பெயர் வைக்கக் கூடாது? இங்கு யார்யார் பெயரையோ வைக்கும் போது இவர் பெயரை ஏன் வைக்கக் கூடாது? பாண்டித்துரையின் பெயரால் ஒரு தெருவுக்குப் பெயர் வைக்காமல் போனால் நம்மைப் போல் நன்றி கெட்டவர்கள் யாருமில்லை. மதுரையில் அவருக்கு ஒரு உருவச்சிலை இல்லை, ஒரு மன்றம் இல்லை. நாம் ஏன் உயிரோடு இருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது. அவரில்லையேல் நாமில்லை, தமிழில்லை, தமிழ் இனம் இல்லை. விரைவாக முயன்று ஒரு தெருவுக்கு அவரின் பெயரை வைக்க வேண்டும். இங்கு அவருக்கு ஒரு சிலை எழுப்ப வேண்டும் பித்தளையிலாவது வெங்கலத்திலாவது அல்லது தங்கத்திலாவது வைக்கலாம். இதற்கு ஒவ்வொருவரும் தலைக்கு ஒரு ரூபாய் கொடுத்தாலே போதும். பெருந்தொகை யார் கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனல் அதில் எல்லோருடைய பங்கும் இருக்க வேண்டும். பல கட்சிக்காரர்களும் இவ்விழாவைக் கொண்டாட வேண்டும்.

1901-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் தமிழ்ச் சங்கம் உருவானது. வ. உ சி. விழா கொண்டாடுகிறார்கள். பொறாமையில்லை கொண்டாட வேண்டும். ஆனல் பாண்டித் துரையாரை மறந்து விட்டார்களே! ஒரு கப்பலைச் செயலாளராக இருந்து ஓட்டினர் வ. உ. சி. அவர் பாண்டித்துரையார் அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார். வ. உ. சி. தேர்ந்தெடுத்தவர் எப்படியிருப்பார். வ. உ. சி. என்ன குப்பைக் கீரையா? எவ்வளவு பெரிய ஆராய்ச்சியாளர்! அவரே




கூடலிலே சங்கமிதைக் கூட்டுவித்த
கோமகனுர் விழாவில்
பணியாள் இந்நாள் அணிபெற வாழும்
செந்தமிழ்ப் புலவர் **கந்தசாமியாருக்குப்**
பொன்னுடை போற்றுகிருர்
ஆட்சிக்குழு உறுப்பினர் **நாகமணியார்**

பாண்டித்துரையாரைத் தலைவராகக் கொண்டார். கப்பல் கம்பெனிக்கு முதலாக மூன்று நூறாயிரம் பொற்காசுகள் போட்டார் துரையவர்கள், அந்த மூன்று இலட்சம் தமிழ்ச்சங்கத்தில் போட்டிருந்தார்களேயானால், அது மூன்று கோடியாகியிருக்கும், முப்பது கோடியாகியிருக்கும் தமிழ்ச்சங்கம் சிறப்பான தொண்டும் ஆற்றும். நல்ல மாணவர்கள் எத்தனையோபேர்கள் பயனடைந்திருப்பார்கள். ஆனால் மூன்று இலட்சம் பொற்காசுகள் கப்பல் கம்பெனிக்கு முதல் போட்டார்களே! அவர்களின் பரந்த நோக்கத்தைப் பாராட்டவேண்டும்,

அவர்களுக்கு இந்தத் தமிழ்ச்சங்கம் சிறப்பாக நீண்ட காலம் நடைபெற வேண்டும் என்றஆசை இருந்தது. அதற்காகப் பாசுகர சேதுபதியை நாடினர். தமிழ்ச்சங்கக் கட்டிடம் வீராச்சாமி நாயக்கருக்குச் சொந்தமான கட்டிடம் பாண்டித்துரைத்தேவர் இங்குவந்தால் நண்பர்களைப் பார்க்கவும் அளவளாவவும், தமிழ் ஆராயவும் நல்ல இடம் வேண்டும் என்றுதான் இதை வாங்கினர். இவர் சோமசுந்தரக்கடவுளிடம் நல்ல பற்று உடையவர். எனவே இக்கட்டிடத்திற்குச் ''சோம சுந்தரவிலாசம்'' என்று பெயர் வைத்தார்.

மாநில அளவில் இங்கு காங்கிரசு மாநாடு நடைபெற்றது. அதற்கு வரவேற்பாளராக நல்லவர் ஒருவர் தேவையெனக் கருதினர் எனவே அதற்குப் பாண்டித்துரைத் தேவரைவிட வேறொருவர் தக்கார் கிடைக்க மாட்டார் எனத்தெளிந்து துரையவர்களையே அக்குழுவுக்குத் தலைமை தாங்கச் செய்தனர். சிற்றரசர்களையே ஒழித்துவிட வேண்டும் என்று நினைத்த அந்தக்காலத்திலேயே வரவேற்புக் குழுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், அப்போது, இவரின் இனிமையான குரல் உயர்ந்த கருத்து ஆகியவற்றைக் கண்ட மதுரை மக்கள் அவர் இங்கு வந்தபொழுதெல்லாம் சொற்பொழிவு செய்யச் சொன்னர்கள்.

முதலில் சேதுபதி உயர்நிலைப்பள்ளியிலே ஓர் அறையிலே பிறந்தது தமிழ்ச்சங்கம். அதற்குப்பிறகுதான் தான் தங்குவதற்கு என்று வாங்கிய இந்த சோமசுந்தர விலாசத்தைத் தமிழ்ச்

சங்கத்திற்குத் தந்தார். தமிழ்ச் சங்கத்திற்கு எதிரே திருமணக் கட்டிடம் துரையவர்கள் தங்குவதற்கு வாங்கிய கட்டிடம்தான் பிறகு எப்படியோ மற்றவர் கைக்கு மாறியுள்ளது. இப்பொழுது உள்ள தலைமை அஞ்சலகக் கட்டிடத்தையும் தமிழ்ச்சங்கம் நிறுவச் சென்று பார்த்தார்கள் எனவே அவரின் உயர்ந்த உள்ளத்தைப் பாரட்டவேண்டும்

சேதுபதி மன்னர்கலாசாலை என்று ஆரம்பித்தார்கள் ஆரம்பித்து, படிக்கும் வயதுடைய மாணவர்களை அழைத்துப் படிக்கச் செய்தார் வீதியிலே போவார், வருவாரை அழைத்தார். உடை கொடுத்து உணவு கொடுத்து, உறையுள் கொடுத்து எல்லா வசதியும் கொடுத்துப் படிக்கச் செய்தார்; தலைக்கு எண்ணெய், விளக்குஎரிக்க எண்ணெய்கூடக் கொடுத்தார்

தமிழ்ச் சங்கத்தேர்வு முன்பு பள்ளி மாணவர்களுக்கு நடந்தது அப்போது பழைய நூல்நிலையம் இருந்தது இடையே சென்னையில் மாணவர் மன்றம் தோன்றி, மாணவர்களைக் கவர்ந்து வருமானம் அதிகம் அதற்குச் சென்றது அதற்கு வருத்தமில்லை மகிழ்ச்சி. 'விடைத்தாள்களை மாற்றியமைத்துக் குறிக்கவேண்டும், என்று சொன்னேன். 'மாற்றி நல்ல முறையில் குறித்துத்தான் தருவேன் இல்லையென்றால் நான் மாட்டேன்' என்று சொல்லி விட்டேன். சரி உங்கள் விருப்பப்படிசெய்வோம் என்று அனுமதித் தனர் அதன்பின் மாணவர்கள் எழுதுவது அதிகமானது.

இங்கு ''பாண்டியன் நூலகம்'' உள்ளது. அது பாண்டித் துரையவர்களின் பெயரையே குறிக்கும் ஒன்பது பேழைகள் நிறைய ஆங்கில நூல்கள். இது உலகத்திலேயே அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாட்டில் இருக்கும், அடுத்துத் தமிழ்ச் சங்கத்திலே இருக்கும் இது பாசுகர சேதுபதி விரும்பிப் படித்தவை அது அவர் போகும் இடமெல்லாம் போகும். அந்த ஒன்பது பெட்டகங்களும் பாண்டித்துரைச் சாமித்தேவர் அவர் கள் கேட்டதின் பேரில் கொடுத்தார் பாசுகர சேதுபதி. இங்கு தமிழில் பல்லாயிரக்கணக்கான நூல்கள் உள்ளன இவையெலாம் வேலை செய்பவர்களும் மற்றவர்களும் வேலையில்லாத போது அறிவைப் பெருக்கிக்கொள்ள உதவியது. போகும் இடமெல்லாம்

நூல் வாங்கி வந்து சேர்த்தார்கள். இது, பின்பு ஒருகாலத்தில் தீப்பிடித்துக் கொஞ்சம் எரிந்து போனது. நீரும் தமிழ்ச்சுவை அறிந்திருக்கிறது, நெருப்பும் கூடத் தமிழ்ச்சுவை அறிந்திருக்கிறது.

பதிற்றுப்பத்து என்ற நூல் இங்கு இருந்தது. அதைக் கரையான் முன்னும் பின்னும உள்ள பகுதியைத் தின்றுவிட்டது பின்பு உ. வே. சாமிநாதய்யர் அதை எடுத்து எஞ்சியதைப் பதிப்பித்தார்.

தமிழ்ச் சங்கத்தில் நூல்களை அச்சிடுவதற்கு என்றே தமிழ் நாட்டிலேயே சிறந்த'' தமிழ்ச்சங்க முத்திராசாலை'' என்ற பெயருடன் அச்சுக்கூடம் நிறுவினர். இவ்வாறு தமிழ்நூல்களைப் பதிப்பித்து அறிவைப் பெருகச் செய்தும், சேர்ந்து படித்தவர்களின் அறிவைப் பெருக்கியும், மேலும் இளைஞர்களைப் படிப்பித்தும் இவ்வாறு மூன்று வழியில் அறிவைப் பெருகச் செய்தது, வளர்த்தது இத்தமிழ்ச் சங்கம். இங்கிருந்து ''செந்தமிழ்'' என்ற மாத இதழ் வெளிவந்தது .அதற்கு இரா. இராகவய்யங்காரை ஆசிரியராக்கி இருந்தனர். அடுத்து, மு. இராகவைய்யங்கார் ஆசிரியராய் வந்தார் அதற்கடுத்து நாராயணய்யங்கார் ஆசிரியராய் இருந்து செந்தமிழைச் சிறப்பாக நடத்திவந்தனர். அதனல் அது நல்ல தமிழ் ஆராய்ச்சி இதழாக வெளிவந்தது.

தமிழைப் பழைய நிலையில் வளர்க்க முன்வர வேண்டும். இலக்கணம் என்பது என்ன? இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் வகுப்பது ஆகும். எனவே தற்கால இலக்கணத்தமிழ் எப்படி இருக்கிறது; மிகவும் தாழ்வடையச் செய்கிறார்கள். நாட்டில் 'கல்கண்டு' பல்பொடி' என எழுத்திலும் பேச்சிலும் தற்காலத்தில் மோசம் செய்கிறார்கள். நாட்களா? நாள்களா? இவ்வாறு பிரச்சனை, எனவே கட்டுப்பாடாகத் தமிழைக் காக்கவேண்டும். பாண்டித்துரைத்தேவர் பிறந்தநாட்டில் இந்தக் கொடுமை இருக்கக் கூடாது இப்போது உள்ள புதுக்கோட்டை மன்னருடைய தாத்தா சீமையில் இருந்தார் அவர் துரையவர்கள் வேண்டியபடி 2008 ரூபாய் அனுப்பினர். தமிழ்ச்சங்க நலத்திற்கு ஓராயிரத்தையும், ஓராயிரத்தை தமிழ்ச் சங்கத் தேர்வில்

முதன்மை, இரண்டாம், மூன்றும் பரிசுக்குரியவர்களுக்குப் பரிசாகக் கொடுங்கள்'' என்று எழுதியிருந்தார். அதில் வேங்கட சாமிநாட்டார். இவர்கள்தான் முதன் முதலாக முதற்பரிசான தங்கத் தோடாவைப் பரிசாகப் பெற்றுர் எனக்குக்கூட ''பிரவேசத் தேர்வில் பரிசு கிடைத்தது. அந்தத் தோடாவில்' 1933 இல் கந்தசாமிக்குப் புதுக்கோட்டை மகாராசா அவர்கள் அன்பளிப்பு, என்று போட்டிருக்கிறது. 12 ஆண்டுகள் கழித்து சங்குப் புலவர் முதல் பரிசாகத் தங்கத்தோடாவைப் பெற்றுர். பாண்டித்துரையவர்கள் 1911-ல் கார்த்திகைத்திங்களில், தனது 48 வது வயதில் மறைந்தார். இவர் தமிழ்ச்சங்கம் தொடங்கி 10 ஆண்டுகள் வாழ்ந்தார்.

தமிழ் நூல்கள் அச்சடித்து பாண்டித்துரையவர்களிடம் பிழைத்திருத்தம் செய்திருக்கிறுர்கள். பிழைகள் இருந்தால் அவருக்குக் கோபம் வரும். பாண்டித்துரையார் மறைந்ததற்கு பத்தாயிரம் இரங்கற்பாக்கள் வந்திருந்தன.

கடலிலுள்ள சங்குகளைக் காப்பாற்றுவது முகில்கள். அது போல முச்சங்கங்களைக் காப்பாற்றியவர் பாண்டிய மன்னர்கள் இந்த நான்காம் சங்கத்தைத் தந்ததும், காப்பதும் பாண்டிய மரபே,

இறந்த சங்கத்தை எடுத்து உயிர் கொடுத்து நம் வேந்தர் காத்தார் வந்த புலவர்களுக்கெல்லாம் வாரிக்கொடுத்து நிலமும் வீடும் கொடுத்து ஆதரித்தனர் சேதுபதி மன்னர்கள். தமிழ்ச்சங்கத் துணைத்தலைவரவர்களை நான் கேட்டுக்கொள்கி றேன்! தமிழ்ச்சங்க மாணவர்கள் வெளிவரும்போது மாணவர் களுக்குப்பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்களின் முழு உருவப் படம் கண்ணாடி போட்டுக் கொடுக்க வேண்டும். தமிழ் பேசும் இடத்திலெல்லாம் இந்த வண்ணப்படம் அவர்கள் வீட்டில் இருக்கவேண்டும்

இராமநாதபுரத்தில் துரையவர்கள் சிலை இருக்கவேண்டும். தமிழ்நாடெங்கும் உள்ள நகரங்களில் எல்லாம் பாண்டித்துரைய வர்களின் சிலையை நிறுவ வேண்டும். இதற்கு முயலவும் வேண்டும்.

இது மறவர் பெருமக்கள் நிறைந்த நாடு. மறவர்கள் நாடு. தமிழ் வளர்த்த நாடு, இராமநாதபுரம் தமிழ்ப்புலவர் பெரு மக்களை உருவாக்கிய நாடு. எனவே இராமநாதபுரத்திலும் வள்ளல் பெருமானார் திருவுருவச் சிலையை அமைக்கவேண்டும்.

பாண்டித்துரைத்தேவர் நூற்றாண்டு விழாவை மிகச்சிரும் சிறப்புமோடு 1969 ஆம் ஆண்டு இந்த இடத்திலேயே நடத்தினார். ஆண்டியப்பத்தேவரவர்கள். தனித்து நின்று பெருவிழாவாக நடத்தினார், ஆண்டியப்பனார் அன்று அவரது தமிழ்த் தொண் டினைப் பாராட்டித் 'தமிழ்த்தொண்டன்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. பாண்டித்துரைச்சாமித் தேவரவர்களுக்குச் சிறப்புச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் ஆண்டி யப்பத்தேவர் உள்ளத்திலே ஓங்கி இருக்கிறது. இந்த எண்ணம் ஆண்டியப்பத்தேவர் ஒருவருக்கு மட்டும் இருந்தால் போதாது. தமிழ் மக்கள் அனைவருக்கும் வரவேண்டும். ஆண்டு தோறும் அப் பெருமகனாருக்கு விழா நடத்தவேண்டும். அவரது தமிழ்ப் பண்பு களை எல்லாம் தமிழ் மக்கள் நன்கு உணர வேண்டும். அனைவரும் திரண்டு எழவேண்டும். முழு உழைப்பினைக் கொடுத்துதவ ஆண்டியப்பத் தேவரவர்கள் இருக்கிறார்கள். நானும் என்னால் இயன்ற உழைப்பினைக் கொடுப்பேன். எனவே உருவச்சிலை அமைக்கும் முயற்சியில் தமிழ்ச்சங்கத்தார்கள் ஈடுபடவேண்டும். புலவர் பெருமக்கள், தமிழ்ப் பெருமக்கள் முழு ஆதரவும் கொடுத் துதவ வேண்டுகிறேன்.

வாழ்க வள்ளல் பெருமகனார் திருநாமம்!

# கருத்தரங்கத் தலைமைப் பேருரை

பேராசிரியர் : டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள், திருநகர்.

இவ்விழா பாண்டித்துரையவர்களின் 105 - வது ஆண்டு நிறைவு விழா. பாண்டித்துரையைப்பற்றி பலர் அதிகமாக அறியாத காரணத்தினால்தான் இவ்விழாவில் அதிக கூட்டத்தைக் காணோம். தமிழ்நாட்டின் அறிஞர்களைப் பற்றி வரலாற்றிலே நாம் படித்திருக்கிறோம். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் பலநாடுகளை தனது ஆற்றலால் வெற்றி பெற்று, தமிழ்நாட்டுப் புகழை அறியச் செய்தனர். கரிகாலன் என்ற பேரரசன் இலங்கை வரைப் படையெடுத்துச் சென்று, மக்களை அடிமைகளாக்கி, தமிழ் நாட்டில் அணைகட்டி விட்டான். இப்படிநமதுநாட்டின் வரலாறு எல்லாம் நிறைய இருக்கின்றன.

அதைவிட, அவர்களின் செயலைவிடப், பாண்டித்துரையவர்களின் செயல் தொண்டு இவைகளை அதிகம் அறிந்திலர் இமயமலைவரை இன்னும் செல்லலாம், வடநாட்டவர்களை நாளை வெல்லலாம். ஆனால் தமிழைக் காப்பது இன்றியமையாதது. தமிழ் அழிந்தால், தமிழ்நாடே அழிந்துவிடும். ஆகவே தமிழைக் காக்கத் தொன்று தொட்டு வந்த சங்கங்களின் அடிப்படையில் இந்தத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்து, அதற்கு வேண்டிய பணிகளை யெல்லாம் செய்தவர் பாண்டித்துரைத் தேவர். இந்தப் பணி யாராலும் செய்ய முடியாத பணி இந்தச் சங்கத்தைத் தோற்றுவித்து 72 ஆண்டுகள் முடிந்து விட்டன இது நான்காம் சங்கம் என்று அழைக்கப் படுகிறது.


மொழிகளை வளர்ப்பதற்கு ஆங்காங்கே எல்லா நாடுகளிலும் திட்டங்கள் வகுத்து சேவை செய்து வருகிறார்கள். ஆனால் தமிழ் முன்னோர்கள் செய்தது போல், மொழி வளர்ப்பதற்குத் திட்டங்கள் வகுத்து இதுபோன்று கழகங்களை ஏற்படுத்தியது வேறெங்கும் இருந்ததில்லை ஒருநாடும் இல்லையென்பதை அறிவீர்கள். பிரஞ்சு நாட்டிலே ஒரு அகடமி உண்டு அது 16-ஆம்

நூற்றாண்டிலேதான்தோன்றியது. ஆனால் தமிழ்மொழிக்கு முதல் சங்கம் எப்போது தோன்றியது என்று வரையறுத்துக் கூறமுடியவில்லை. அந்தச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட பிறகு பலஆண்டுகள் சிறப்பாக நடந்திருக்கலாம், பிறகு விடுபட்டிருக்கலாம், பிறகு தோன்றியிருக்கலாம். இப்படித் தமிழ்ச் சங்கம் தோன்றியிருக்க வேண்டும், இவ்வாறு தோன்றியும் அழிந்தும், பிறந்தும் புறக் கணிக்கப் பட்டும், வளர்ந்தும் வந்ததைத்தான் முதல் இடை, கடைச்சங்கம் என்று சொல்கிறார்களே தவிர வேறொன்றுமில்லை. ஒருதமிழ்ச்சங்கந்தான் பலவாறு தோன்றிப்புறக்கணிக்கப்பட்டுப் பிறகு நான்காவதாக இந்தத் தமிழ்ச் சங்கம் பாண்டித்துரையார் அவர்களாலே தோற்றுவிக்கப் பட்டது. ஆகவே நண்பர்களே. இந்த நான்காவது தமிழ்ச்சங்கம் தோன்றியிருக்க வில்லையானால் நாம் பேசுகின்றதமிழ் இந்த நாட்டில் இப்பொழுது இருந்திருக்கக் கூடமுடியாது. நாம்நட்புக்கொண்டுள்ளோம்இதனாலே இத்தமிழ் நம்மை விட்டு மறையாமல் இருக்கிறது. இப்பொழுது நமக்கு இது பற்றிக் கவலையே கிடையாது. பொருள் தேட வேண்டும். வாழ வேண்டும் என்பதைத் தவிர தமிழ் வாழ வேண்டும் காக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. மொழியை யாரும் புறக் கணிக்க முடியாது. அதற்குச் சான்று வேறெங்கும் போக வேண்டாம். முன்பு ஒரு காலத்தில் இருந்த தமிழ், இப்பொழுது எப்படி இருக்கிறது என்று பார்த்தால் போதும்.

தொல்காப்பியர் காலத்தில் கி. மு, ஏழாம் நூற்றாண்டில் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்தின்' எல்லை.' இப்போது வேறுபக்கம்ஆகிவிட்டது. 'சேரநாடு' என்று அழைக்கப்பட்ட 'செந்தமிழ் நாடு' இன்று 'மலையாளம்' என்று அழைக்கப்படுகிறது. 'எருமை நாடு' என்று அழைக்கப்பட்டது இன்று 'கன்னட நாடாகப்' போய் விட்டது, இவை ஏன் போனது? எப்படிப் போனது? என்பதெல்லாம் ஆராய்ச்சிக்கு உரியது. நம்முடைய போற்றுதல் இல்லாத காரணத்தினால்தான் நாம் இதையெல்லாம் இழந்தோம். இதேபடி வாம் போய்க்கொணடிருந்தால் தமிழ்நாடா இதுதலைநகரா! என்று ஐயமாகிப் போனாலும் போய் விடும் ஏனென்றால் 'தமிழ்நாட்டில் தமிழ்தான் இல்லை' என்று புரட்சிக் கவி சென்னதுபோல் இப்பொழுது இருக்கிறது.

தமிழ்ப்புலவர்களைச் கூட்டி, ஆய்ந்து நாட்டுமக்களிடையே நற்றமிழைப் பரவச்செய்து, நல்ல தமிழை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, நமது பாண்டித்துரையவர்களின் செயற்கரிய செயலைப் பாராட்டிப் புகழ்ந்து, பொன்னெழுத்துக்களாலே பொறித்துவைத்துப்பாராட்டக்கடமைப்பட்டுள்ளோம் எனவே பாண்டித்துரையவர்களின் 105–வது ஆண்டுவிழாவைக் கொண்டாடுகின்ற துணைத்தலைவர் செல்லத்தேவர் அவர்களையும், நமது ஆண்டியப்பன் அவர்களையும் பாராட்டக்கடமைப்பட்டுள்ளோம் ஆண்டியப்பன் சொன்னார்கள். 62–ஆம் ஆண்டு ஒருநாள் தானே விழாநடத்தினோம், ஒருவாரம் நடத்த முடியவில்லை என்று ஆலை மதுரைத் தமிழ்ச்சங்கம் இன்று நடத்துகிறது. மதுரைத் தமிழ்ச்சங்கம் தோன்றி இதுநாள் வரை விழா நடத்தவில்லை என்றால் அது சிந்திக்க வேண்டும். எதற்காக நடத்துகிறோம் என்றால் மக்கள் சிந்திக்க வேண்டும், போற்ற வேண்டும் அவரது தொண்டினைப் பாரட்ட வேண்டும் என்றே. இது தமிழில் பற்று உள்ளது என்பதற்குத்தானே! இல்லை யென்றால் விழா கொண்டாடினால் என்ன, கொண்டாடாவிட்டால் அதைப்பற்றி என்ன. எனவே பாண்டித்துரையார் அவர்களுக்கு என்னபயன். அவர்களின் கூட்டத்தார்களுக்கு என்ன பயன்? இவ்வாறு கொண்டாடுவதனால் அதிகமாகப் பைந்தமிழ்ப் பற்று வளரும் என்பதற்காகத்தான் பெரிய அளவில் கொண்டாட வேண்டும். இந்த அளவில் கொண்டாடுகிறார்கள் என்றால் மகிழ்ச்சிஅடைய வேண்டும்.

பாண்டித்துரை அவர்களைப் பற்றிய வரலாறும், நேற்று, இன்றுகாலை எல்லாம் கவியரங்கத்திலும் அதிகமாகச் சொல்லியிருப்பார்கள். அதனால் இன்னும் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. பேராசிரியர்களெல்லாம் வந்திருக்கிறார்கள் பாண்டித்துரையாரைப் பற்றி ஒன்றை நினைவில் கொள்வது தகுதியாகும். என்னவென்றால், அக்காலத்தில் பெருமன்னர், மன்னர் மரபினர் செல்வக் குடும்பத்தவர், செழிப்பாக வாழக்கூடியவர், அவர் செந்தமிழைப் பற்றி ஏன் கவலை கொண்டார்? இப்போது சிலருக்குப் பணம் வந்தாலே தமிழை விட்டு விடுகிறார்கள், 'அப்பா' என்று அழைப்பதைப் 'பப்பா' என்கிறது குழந்தை. 'அம்மா' என்பதை 'மம்மி' என்கிறார்கள். 'டாடி' என்கிறார்கள். எல்லா வீட்டிலும் பார்த்தால் தமிழே பேசுவதில்லை. ஏனென்றால் வேறு சொற்



பழவிறல் மூதூரில் வழங்கு மொழிப்
புலவர் **இளங்குமரனார்க்குப்**
பொன்னாடை போர்த்துகிறார்
தமிழ்ச் சங்கக் காவலர் **பெரியசாமியார்**




நூலாய்வில் நுண்மாண் நுழைபுலம்
கண்ட 20-ஆம் நூற்றுண்டுத் தொல்காப்
பியனார் டாக்டர் **இலக்குவனார்** அவர்
களுக்குப் பொன்னாடை போர்த்துகிறார்
தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர்
செல்லத் தேவரவர்கள்

களில் பேசுவோம் என்றால் மக்களிடத்தில் மதிப்பு இருக்கும் என்று கருதுகிறார்கள். அப்போது ஆங்கிலேயர்கள் ஆண்டகாலம் பதவி வகித்த காலம், அடிமையாய் இருந்தகாலம், பிறமொழி ஆக்கிரமித்த காலம். ஆனால் அப்போது பாண்டித்துரைக்கு எப்படிச் செந்தமிழ்ப் பற்று வந்தது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். இளமைக்காலத்திலேயே அவருடைய தந்தை பொன்னுச்சாமித் தேவர் இவருக்குக் கல்விஅளிக்கின்ற முறையிலே இளமைக் கல்வியில் சேர்த்து அதாவது அட்சிமுறைக் கல்வி ஆங்கிலக்கல்வி இவையும் கெடாமல் செந்தமிழ்க் கல்வி கற்பிக்குமாறு செய்திருந்தார். எனவே, செந்தமிழைக் கற்று அதன்மேல் பற்றுக் கொண்டு அதை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் பதிந்துவிட்டது. அதேபோல் இன்றுள்ள இளைஞர்களுக்குத் தமிழ்மொழிப் பற்றைபும் ஊக்கத்தையும் வளர்க்கச் செய்தோமானால் இந்தநிலை இராது. ஆனால் நாம் இப்போது என்ன செய்கின்றோம்? இப்போது எங்கு பார்த்தாலும் 'நர்சரி ஸ்கூலாம்' சினிமாக்கொட்டகையைப் போலக் குழந்தைகளை அடைத்து 'ஆங்கிலோ இன்டியன்ஸ்' என்ற இரண்டு பேரைப் போட்டு A,B,C,D, சொல்லிக் கொடுக்கிறார்கள் ஒருபிள்ளைக்கு 15ரூபாய்வரை மாதம் வாங்குகிறார்கள். சாதாரணமானவர்கள் கூட தம் பிள்ளையை அங்கு அனுப்புகிறார்கள். அதனால் என்ன லாபம். அம்மா என்றுசொல்லத் தெரியவில்லை A"CD சொல்கிறது அவர்களைக்கேட்டால் என்ன சொல்கிறார்கள். இது படித்தால் தான் சம்பாதிக்க முடியும் அதனால் தமிழ் படித்தால் என்ன? ஆங்கிலம் படித்தால் என்ன? என்கிறார்கள் எனவே பாடத் திட்டத்தைத் திருத்தி தமிழ் கற்பித்தால் தான் தமிழர் தமிழர்களாக வாழ முடியும். தமிழர் பண்பாடு காக்க முடியும் என்பதைப் பாண்டித்துரை வழியாக அறிந்து கொள்கிறோம்.

அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் தமிழாராய்ச்சிக்கென்றே நேரம் ஒதுக்கி வந்துள்ளார்கள். சிறுவர்கள் விளையாடுவதற்கெனச் சிலநேரம் வகுத்துத் தந்துள்ளார். வருகின்ற புலவர்களைச் சிறப்பித்து அவர்களை ஊக்கப் படுத்தியுள்ளார். பொருள்கொடுப்பது என்பது அவ்வளவு எளிதானதல்ல. முன்பு வாரிக்கொடுத்த வள்ளல்களை வாயாரப் புகழ்ந்தார்கள் என்றால், எல்லோருக்கும் வாங்கத் தான் தெரியுமே தவிர கொடுக்கத்

தெரியாது. கொடுப்பதானுலும் ஏதேனும் காரணம் இருந்தால் தான் கொடுப்பார்களே தவிர ஐயரைக்கூப்பிட்டு இந்தாருங்கள் என மனமுவந்து கொடுக்கமாட்டார்கள்.

''ஆற்றுவதில் நூற்றெருவர் ஆயிரத்தொன்ரும்புலவர்

வார்த்தை பதினுயிரத்தொன்றென்று தானுகக்''

கொடுக்கக் கூடிய வள்ளல் கோடிக்கொருவர் என்ருர்கள். அது போலப் பாண்டித்துரைத்தேவர் அந்தக் கோடிக்கான ஒருவரில் ஒருவராக இருந்துள்ளார். தமிழுக்காகச் சிறப்பாகச் செய்த அவரை நன்ருக அறிந்திருக்கக் கூடும்

சங்கம் என்ருல் புலவர்கள் கூடுவது, ஆராய்வது, நற்ற மிழைக் கற்பிப்பது. ஆக வெளிநாட்டுக்காரர்கள் இன்னும் சொன்னுர்கள், மொழியை உருவாக்குகின்றவர்கள் புலவர்களும் பொதுமக்களும் என்று புலவர் நற்றமிழை வெளியிடவேண்டும். பொதுமக்கள் அதைப் அன்பற்றிப் போற்ற வேண்டும். நல்ல நிலைமையில் வரவேண்டும் என்ருல் புலவர் வாயிலிருந்து வர வேண்டும். மக்கள் காக்கவேண்டும். பொதுமக்கள் ஏற்று நாடே பயிலவேண்டும். பொதுமக்களும் புலவர்களும் சோந்துதான் மொழியை ஆக்குகிருர்கள் என்று மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் களெல்லாம் கூறியிருக்கிருர்கள். ஆக பொதுமக்களுக்கு வழி காட்டியாக இருந்து புலவர்களைக் கொண்டு நூல்கள் இயற்றி மக்களிடத்தில் வெளியிட்டார்கள். ஆதலினுலே தான் இன்று தமிழ்நன்ருகச் சிறந்த தமிழாக இருந்து வருகின்றது. தொல் காப்பியர் காலத்திலேயே இது'செந்தமிழ்' 'செந்தமிழ் இயற்கை சிவணியநிலம், எனச்சொல்கிருர். 'செந்தமிழ் இயற்கை சிவணிய என்று சொல்லும் பொழுதே செந்தமிழாலேயே மற்றவைகளை வழங்கும் முறையை அக்காலப் புலவர்களும். அரசர்களும் முடிவாக்கி இருந்தார்கள், அதனுலேயே தான், பாண்டித்துரை யவர்களும் இச்சங்கத்தை ஆராய்ச்சி செய்திருக்கிருர்கள். 'செந்தமிழ்' என்ற இதழ் நடத்தி இருக்கிருர்கள், அச்சுக்கு அச்சுக்கூடம் ஒன்று அமைத்திருக்கிருர்கள். இந்தச் சக்கம் இந்த முறையில் உருவாகி இப்போது நமது செல்லத்தேவர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகின்றது. முன்புஎவ்வாறு

உதவியாக இருந்தார்களோ அதுபோல இப்போதும் உறுதுணையாய் இருந்து செயலாற்ற வேண்டும்.

அந்த 'செந்தமிழ்' இதழ் இன்று இருக்கின்றது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை தலையைக் காட்டுகின்றது. முன்புபோல திங்கள் ஒன்று வரவில்லை. இங்கிருந்த அச்சுக்கூடம் எங்கோ போய்விட்டது. அதிலிருந்த ஆராய்ச்சித்துறை இருக்கும் இடம் தெரியவில்லை. ஆனல் கல்லூரி ஒன்று நடைபெறுகிறது. அதிலும் ஆங்கிலத்தைக் கொண்டுவந்து புகுத்தி, P·U,C;B.A, என்று வைத்துப்பட்டப்படிப்பென்று நடத்துகிறார்கள், மாணவர்களும் பயில்கிறார்கள், பேராசிரியர்களும் சொல்லிக் கொடுக்கிறார்கள் இந்தத்தமிழ், செந்தமிழ் தெரிந்தவர் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்றால் அது ஆராயத்தக்கது. ஏன் நான் சொல்லவந்திறேன் என்றால், தமிழ்க் கல்லூரியிலே ஆங்கிலம் எதற்கு? பேராசிரியர்கள்கூட கோபம் கொள்ளலாம் கேளுங்கள், நம் நாட்டுமொழி என்ன ஆனது? ஆங்கிலேயன் ஆட்சிக்காலத்தில் "Oriental Language' என்று சொன்னான். அந்தக்காலத்தில் கல்லூரியிலே போனால் "ஆராய்ச்சி எடுக்கிறேன்" என்பான். என்ன ஆராய்ச்சி என்றால் 'லிட்டரேச்சர்' என்பான். லிட்டரேச்சர் என்றால் இலக்கியம், 'தமிழ் லிட்டரேச்சர்' என்பானா? இல்லை, 'இங்கிளீசு லிட்டரேச்சர்' என்பான். என்ன கிளாசு, என்றால் தமிழ் லாங்குவேசு என்பான். ஆங்கிலமும் 'Language தானே என்றால், தமிழ்கிளாசு'னு தமிழ் ஈச்ட்வர்னுக்குலர் என்பான். வர்னுக்குலர் என்றால் என்ன தெரியுமோ? அடிமை மொழி அது ஆங்கிலேயன் காலம் அவன் மொழி, அவன் ஆண்டான் அதனாலே முடியாது. அதனால் கீழ்நாட்டுமொழி என்றுசொல்ல வேண்டியது எங்கே? இங்கிலாந்திலே, ஆங்கிலத்தோடு, தமிழ், மலையாளம், கன்னடம், கற்பிக்கும் போது தெரிந்து கொள்வதற்குச் சொல்லலாம். மேலை நாட்டிலே கல்வி கற்கும் போது சொல்லலாம். ஆனால் தமிழ் நாட்டிலே தமிழ் ஆட்சிமொழியாய் இருக்கிற இடத்திலே தமிழ் தேசியமொழி என்று ஒப்புக்கொண்ட பிறகும்இந்தக் கல்லூரிக்குப் பெயரென்ன? 'Oriental College" இங்கே இருந்து கொண்டா? இந்தியாவிலே இருந்து கொண்டே. மதுரையிலே இருந்து கொண்டே அப்படிச் சொல்வதா? முதல்வர் இருக்கிறார்.

இவருக்குச் சம்பளம் என்ன? ஆங்கிலமும் இங்கே இருப்பதனால் தப்பித்தார், கொஞ்சம் கூட்டிக்கொடுக்கலாம். அப்படி இல்லாமல் இருந்தால் என்ன ஆகும் தெரியுமா! படிப்பெல்லாம் ஒன்றுதான், ஆனால் அவருக்கு 1000 இருக்கும் இவர்களுக்கு குறைவுதான்

தமிழ்க் கல்லூரியில் பேராசிரியர் இருக்கிறார். மற்ற கலைக் கல்லூரியில் பேராசிரியர்கள் அதாவது ('Professor's) அவர்களுக்கு 600 ரூபாயிலிருந்து 1000. இவர்களுக்கு என்ன சம்பளம் குறைவுதான். முன்பு ஆங்கிலப் பேராசிரியர்க்கு 1000 சம்பளம், சமக்கிருத ஆசிரியருக்கு 1000 சம்பளம். ஆனால் உ. வே. சாமிநாதய்யர் – தமிழ்ப்பேராசிரியருக்கு 90 ரூபாய் சம்பளம். அது ஆங்கிலேயர்காலம் இது ஒப்புக்கொள்ளலாம். ஆனால் இப்பொழுது நாட்டை ஆள்கிறவர் யார்? தனித்தமிழர் நாட்டின் முதல்வர் யார்? தனித்தமிழர் கல்வித்துறை அமைச்சர்யார். தனித்தமிழர் சட்டமன்ற உறுப்பினர்கள் யார்? தனித்தமிழர் இந்தக் கல்லூரி முதல்வரும் ஒன்றுதான் ஆக அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் இவர்களுக்கு கொடுக்க வேண்டாமா? இதாவது கொடுக்கிறார்களே போதாதா, Professor's என்கிறார்களே இது போதாதா என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை. இவர்கள் நாலாண்டு படிக்கிறார் கல்லூரிப்படிப்பு,அவர்களும் நாலாண்டு படிக்கிறார்கள் அவர்களை B. A. Degree என்கிறான். இவர்களை Orientle Title என்கிறான். ஆங்கிலத்தில் என்ன செய்தான் தெரியுமா? இது அடிமையான மொழி என்று தமிழை டைட்டில் என்றான் அதை வளர்க்கக் கருதி Degree என்றான் ஒருகாலத்தில் B.A விலேகூடத்தமிழ் கிடையாது. "இன்டர்மிடியட்டில் கூடத் தமிழ் கிடையாது. கட்டுரை கிடையாது. பிறகுப் போராடிப் போராடித் தமிழ் கொண்டு வந்தார்கள் இந்தவித்துவானிலும் கூட தமிழ் கிரந்தம்தான் உண்டு தனித்தமிழ் கிடையாது எனவே மாணவர்கள் தமிழென்றால் என்ன என்று எண்ணிவிடுவார்கள்.

உ. வே, சாமிநாதய்யர் அவர்கள் அப்போதிருந்த நீதிக் கட்சியோடு தொடர்பு கொண்டுச் சட்டத்தை மாற்றித் தனித்

தமிழில் வித்துவான் பட்டத்தை அமைத்தார். பிறகு வித்து வான் 'D' என்று வைத்தார்கள் பிறகு, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் 'புலவர்' என்று வைத்தார்கள். எல்லாவற்றையும் ஒன்ருக Degree என்ருல் என்ன.

அப்போது வித்துவானுக்கும் பட்டமளிப்பு விழா உண்டு, எல்லோருக்கும் பட்டமளிப்புவிழா ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஆடை உண்டு. அதிலே வித்வான்களுக்குச் சாம்பல் நிறக் கவுன் வைத்திருந்தார்கள். எனக்குத் தெரியும். நான் மாணவனுக இருந்தகாலத்திலேகூட இந்தச் சாம்பல் நிறக்கவுன் வைத்துக் கொண்டு போனுல் இந்தப் பட்டதாரிகளிலே உரிமை கிடையாது. நாங்களும் எழுதிஞேம் 'என்னய்யா நீ கவுன் கொடுக்கிருய் பட்டமும் கொடுக்கிருய் அவர்களுடன் உட்கார என்று சட்டமும் கொடுக்கிருய், சரியான உரிமை கொடுக்க வில்லை, இப்போது என்ன செய்ய வேண்டும் என்ருல் புலவர் படிப்பையும் பட்டமாக்க வேண்டும். இதை அமைச்சர்கள் நினைத்தால் செய்யலாம்.

தமிழ்ப் புலவர்கள் நாவலர், கலைஞர்கள் மனதுவைத்தால் அதைச் செய்து முடிக்கலாம். தமிழ்ச்சங்கமும், துணைத்தலைவர் அவர்களும் மற்றவர்களும் முயலவேண்டும். தமிழோடு ஆங்கிலத் தையும் கலந்து தமிழாசிரியர்களில் சிலபேர் பேசுகிருர்கள். அவர்கள்கூட அதனுலென்ன என்கிருர்கள்.

என்னுடைய கருத்து என்னவென்ருல் நம்முடைய மொழி வேறுச் சொற்களைக் கடன் வாங்காமல் கலப்பில்லாமல் குழப்பாமல் அதை எழுத வேண்டும். நமது சொற்களைக் கொடுக் காமல், பிறவற்றையே கடன் வாங்கி அதை திருப்பிக் கொடுக் காமல் போனுல், 'Bankrus' என்ற நிலையை அடையலாமா? ஆங்கிலக்கருத்து, ஆங்கிலேயர்களுக்காக ஆங்கிலத்திலேயே எழு தப்பட வேண்டும் தமிழ் மொழியிலே பிறமொழி கலந்தால்தான் வளரும் என்கிருர்களே; அது மாற்றப்படவேண்டும். ஆங்கில மொழியோடு பிறமொழி கலந்ததினுல் மட்டும் ஆங்கிலம் வளர வில்லை. ஆங்கிலேயனுடைய ஆட்சியினுலே, போற்றுதலினுலே அவனது நிர்வாகத்திறமையினுலே ஆங்கிலேயனுடைய போர்

முறையினலே அவர்களின் அறிவினலே, வேற்று நாட்டவர்களை அடிமை கொண்டதனலே ஆங்கிலம் வளர்ந்தது தவிர வேற்று மொழி கலந்ததினல் வளரவில்லை. ஆகவே மொழி வளர்ச்சிக்கும் வேற்று மொழிக் கலப்பினல் பயன் கிடையாது வேறு மொழிச் சொல் கலந்ததினல் பயன் என்ன? இந்தியா முழுவதும் பரவவேண்டியதை இழந்துவிட்டோம். ஆனல் தமிழ்ச்சங்கத்தின் தொண்டு என்ன? தமிழைத் தூய்மையாக வழங்கச் செய்வது, தூய்மையாகத் தமிழிலே எழுதச் செய்வது இதுதான் தமிழ்ச் சங்கத்தின் முதன்மையான கடமை. இந்தக்கடமையிலே நமதுபேராசிரியர்களுக்கு மிகுதியான பொறுப்பு உண்டு. கல்லூரி முதல்வருக்கு மிகுதியான பொறுப்பு உண்டு. ஏன்? அவர்கள் இளைஞர்களுக்குச் சொல்லுகிருர்கள். ஆனல் அவர்களுக்குத் தூய்மையான மொழியில் கற்பித்தால்தான் வெளி வந்த பிறகு அதன்படி நடப்பார்கள் நம்முடைய ஆட்சி தமிழ் ஆட்சி சிலதுறையில் நல்ல தமிழ் பயன்படுத்தப்படுகிறது. சிலதுறையில் நல்லதமிழ் பயன்படுத்தப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? அத்துறையில் உள்ளவர்களின் தமிழ்ப் பற்றுத்தான் காரணம். எனவே மாணவர்கள் தான் பின்னல் நல்லமுறையில் செயலாற்ற இருப்பவர்கள் ஆளப்போகிறவாகள். எனவே அவர்களை நல்லமுறையில் உருவாக்குவது பேராசிரியர்களின் கடமை.

பேராசிரியர்களே ஆங்கிலம் கலந்து பேசுகிருர்கள். மாணவர்கள் அதைப்பார்த்துவிட்டு நாமும் பேசினல் என்ன என்று நினைக்கிருர்கள் தமிழ்ச்சங்கத்தின்நிலை இன்று தூயதமிழ் காத்தல். எனவே தூயதமிழ் காத்தலுக்குப் பேராசிரியர்களும் மாணவர்களும் தயாராகிக்கொள்ளவேண்டும் எனவே தமிழாசிரியர்கள் சிறப்பாக இருக்க வேண்டும். தமிழ்க் கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரிர்களுக்குத் தமிழ்ப்பற்றே இல்லையானல் அங்கு இடம்கிடையாது என்று ஆக்கவேண்டும். ஆனல் இங்கு உள்ள பேராசிரியர்களுக்கும் முதல்வருக்கும் தமிழ்ப்பற்று இருக்கிறது. அதில் ஒன்றும் ஐயம் இல்லை வெளியில் சில பேருக்கு இல்லை அதனல்தான் இங்கே சொல்லவேண்டியதிருக்கிறது.

எனவே பாண்டித்துரைச் சாமித்தேவர் அவர்கள் இந்தச் சங்கத்தை தோற்றுவித்து பணிசெய்யவில்லையென்றால் தமிழ் என்ன ஆகியிருக்கும்? இதற்கு ஏன் சங்கம் என்று பெயர் வைத்தார்கள். அவர்கள் குறிக்கோள் என்ன? செந்தமிழை வளர்ப்பது துணைத்தலைவர் மாதம்ஒருமுறையாவது இங்குவந்து கட்டுரை கவிதைகளை வெளியிட்டால் மக்களுக்கு உதவும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர்பட்டம் கொடுக்கிறார்கள். புலவர்களைப் பெருக்குகிறார்கள். இதெல்லாம் சரிதான். வேறு கல்லூரி மாணவர்கள் ஏதோ மனுக் கொடுத்திருக்கிறார்கள் தீர்மானம் போட்டு. அதாவது 'தமிழ்ச் சங்கத்தில் தேர்வு நடத்திப் புலவர்பட்டம் கொடுப்பதை நிறுத்தவேண்டும்' என்று. இது எப்படி இருக்கிறது? நானும் சாப்பிடுகிறேன், அவனும் சாப்பிடட்டும், பிறருக்குச் சாப்பாடு போடாதே என்பதைப் போல் இருக்கிறது. இது எங்கேயாவது உண்டா? ஆனால் அமெரிக்காவிலெல்லாம் பல்கலைக் கழகங்கள் விரும்பிய அளவு தொடங்கிக் கொள்ளலாம், அங்கு அரசாங்க ஆணைகள் வேண்டாம், உத்தரவுகள் வேண்டாம். ஏன், அவர்களே தொடங்கி அரசாங்கத்திடம் ஈட்டுத்தொகை கேட்டால்தானே ஒப்புதலைப் பெறப் போகிறோம். அவர்களே நடத்துகிறார்கள், பட்டங்களைக் கொடுக்கிறார்கள், ஆனால் வேலை பெறுவது எப்படி? நான் படித்திருக்கிற அளவிலே தெரிகிறது, எந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளி வந்தவன், சிறந்த முறையில் பணியாற்றி உயர்ந்த முறையில் பெயர் பெற்று வருகின்றானோ, அவன் முதலில் வேலையில் சேரலாம்? சரி எங்கே படித்தார், எந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவந்தவர் என்று தெரிந்து, இந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளி வந்தவர் ஆயின் சிறப்பாக இருப்பார்கள் என்று வேலை கொடுக்கிறார்கள்.

எனவே மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் படித்து, பட்டம் பெற்று வெளியே வந்தால், அங்கே நல்லதிறமையிருக்கும், நன்றாக இருப்பார்கள் என்று தெரிந்து அவர்களே வரவேற்பார்கள். எங்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்


தவர்கள்தான் வேண்டும் என்று கேட்பார்கள். அப்படியும் ஒரு சூழ்நிலை உருவாகாமல் போனால் நாம் வருந்தவேண்டும். சிறப்பாய் ஒரு தனிப்பல்கலைக் கழகமாக இருந்து தனிப்பட்டங்களை வழங்கலாம். அதற்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே மற்ற முயற்சிகளை யெல்லாம் தவிர்த்து இந்தச் சங்கமானது தனிப்பல்கலைக் கழகமாக உருவாகி, நல்ல தமிழ்ப் புலவர்களை உயர்ந்த தமிழ்ப் புலவர்களை உருவாக்கக் கூடிய சூழ்நிலையை உண்டாக்குதல் தமிழரின் கடமையாகும். ஆகவே நண்பர்களே பாண்டித்துரையின் பெயரால் இந்த விழாவைக் கொண்டாடுகிறோம். முன்பு தலைவர்கள் பேசியதுபோல சிறந்த பணியாற்றிய பாண்டித்துரை யவர்களின் உருவச்சிலையை மதுரையில் நல்லஇடத்தில் வைப்பது நல்லது. வேறு எங்கும் வைக்காமல் போனாலும், தமிழ்ச்சங்கத்திற்கு முன்னாலேயாவது வைக்க வேண்டும். யார்யாருக்கோ எங்கெங்கேயோ சிலைவைக்கிறார்கள், பெயர் வைக்கிறார்கள். பாண்டித்துரை பெயரால் என்ன அய்யாநினைவிருக்கிறது? மதுரையில் என்ன இருக்கிறது? பதவிக்கு வருவோர் என்னென்னவோ பெயர் வைக்கிறார்கள். சொந்தப் பணத்தைப்போட்டு, செலவழித்து, சொந்த முயற்சிசெய்து தமிழைவளர்த்து, இந்தவீட்டையே சங்கநலத்திற்குக் கொடுத்து செய்த பாண்டித்துரைக்கு ஒரு பெயர் வைத்தார்களா? ஒரு பாலத்திற்குப்பெயர் வைத்தார்களா? அல்லது ஒரு திரையரங்கிற்காவது பெயர்வைத்தார்களா? ஏன் வைப்பாரில்லை? இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறது? பேரும்புகழுந்தான். கவனிப்பாரில்லை முன்னாலே யார்தொண்டு செய்தார்? அவர்நினைவென்ன? சிந்திக்க வேண்டும். இப்போது புலவர்களையும் மாணவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மாணவர்கள் காலங் தங்களுக்குக் குழந்தை பிறந்தால் பாண்டித்துரை என்று பெயர் வையுங்கள். பெண் பிறந்தால் பாண்டியம்மாள் என்று பெயர் வையுங்கள். அவரை பிறகு எவ்வாறுநினைவுகொள்வது! இராமன், கிருட்டிணன் என்றுஏன் பெயர் வைக்கவேண்டும்? இவர் பெயரை வைக்கலாம் பைந்தமிழ் உள்ளவரைப் பாணடித்துரையை மறக்கலாமா? ஆகவே நமதுநண்பர்கள் எல்லாம்கூடி அவரது திருவுருவம் எங்காவது ஓரிடத்தில் நினைவாய் வைக்கவேண்டும். இன்னொரு வருத்தம் உண்டு. பெரியகுளம் போய் இருந்தேன். அங்கேதான் பார்த்தேன் திருவள்ளுவர் சிலையை, சென்னையிலும் இருக்கிறது.

இவர் மதுரையிலே பிறந்தார் எனச்சொல்கிறுர்கள். அதுவும் மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் குறளை ஏற்றினர் என்றுசொல்கிறுர் கள்.அப்படிப்பட்ட இந்தமதுரையிலே பொதுவிடத்திலேயாவது திருவள்ளுவர் சிலை இல்லை ஐயா! தமிழ்ச்சங்கத்திலே யாவது அறைக்குள்ளே இருக்கிறது. இவருக்குச்சிலைவைக்கவேண்டாமா இதையார் செய்கிறுர்கள், ஏதாவது மேம்பாலம் திறக்கிறுர்கள். அதற்குத் திருவள்ளுவர் பெயரை வைக்கிறுர்களா? சொல்கிறுர் களா? அது கிடையாது. நாங்கள் அப்போதே சண்டையிட்டோம். இந்தப் பல்கலைக் கழகத்திற்கு "திருவள்ளுவர் பல்கலைக் கழகம்" என்று பெயர் வைக்க வேண்டும்" என்று. எனது தலைமையில் அதற்கான செயல் செய்தோம், கிளர்ச்சி யெல்லாம் செய்தோம். ஆனுல் அப்போது இருந்த ஆட்சி காங் கிரசு ஆட்சி, அதனுல் தமிழுக்கென்ன ஆனது, வடநாட்டுக்காரன் இந்தியைக் கொண்டு வந்து விட்டான். நம்மவர்க்கே இப்படி யிருந்தால் என்ன ஆகும்! மயிலாடும்பாறை சட்டமன்றத்தில் கேட்டார்கள், அதற்குத் தமிழ்பற்று மிகுந்த நமது முதலமைச் சர் என்ன சொன்னுர்கள். அங்கு மயிலும் இல்லை, ஆடையும் இல்லை என்றுர்கள்.

ஆகவே இந்த செந்தமிழ்க்கல்லூரி தமிழ்ச்சங்கம் சிறந்த பல்கலைக் கழகமாக வரவேண்டும் நம்முடைய பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்கு ஒரு சிறந்த நினைவு ஏற்படுத்த வேண்டும்

மதுரைப் பல்கலைக் கழகத்தைக் கூட 'பாண்டித்துரைப் பல்கலைக்கழகம்' என மாற்றலாம். இங்கு இருக்கிற கல்லூரி ஒன்றுக்குப் பாண்டித்துரைக் கல்லூரி என்று வைக்கலாம். இது ஒரு பெரிய காரியம் அல்ல. அவருடைய சிரிய தொண்டு தெரி

யாதே. விளம்பரப் படுத்தவில்லை, பாண்டித்துரை விழா என்று அறிக்கை இருக்கிறதே, அதில் தலைவர்யார்? செயலர் யார்? என்று இருக்கிறதா? எவ்வளவு பேர் பார்க்கிறார்கள், தெரிய வேண்டாமா? வெளியூர்க்காரர்களுக்குத் தெரிய வேண்டாமா? மற்றவன் என்ன நினைக்கிறான், இது தமிழ்த்துறையா? இவன் அப்பாவி, ஒன்றும் தெரியாதே இவனுக்கு என நினைக்கிறான். நாமெல்லாம் கடைக்குப் போனால் அப்பாவி, காலணாவோ, அரையணாவோ, கொள்ளையடிக்கிறதாக இருந்தால் அது வேறே. மற்றவர்கள் நாணயம் இல்லாமல் நடந்தால் வீரம். நேர்மையாக நாணயமாக இருந்தால் அவர்கள் என்னப்பா அப்பாவி, மற்றவர்கள் எல்லாம் கடைக்குப் போனால் வீரம், நாம் கடைக்குப் போனால் அவர் அப்பாவிடா. என்று நினைக்கிறார்கள். எனவே நாட்டுமக்கள் திருந்த வேண்டும்.



தெள்ளுதமிழ்ப் புலவரின் நெஞ்சையெல்லாம்
அள்ளித்திறை கொண்ட பண்பாளன்
பாண்டித்துரைத்தேவர் பாமாலை கவியரங்கில்
கலகலவெனத் தமிழொலிகள் கமழ்கின்ற கவிதைப்
பொலபொலெனப் பெய்ததமிழ்க் கவிஞர்களும்
நலமுயநத் தொண்டாற்றும் தமிழ்ச்சங்கக்
காவலர்களும்

தமிழ் வாழ்க.

# "வள்ளல் பாண்டித்துரைச்சாமித்தேவர் பாமாலைக் கவியரங்கம்"

தலைவர்: பாவலரேறு திருமிகு. ச. பாலசுந்தரம்,
தமிழ்ப் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

**தமிழன்னை வணக்கம்:-**

எண்ணும் எழுத்தும் எழுத்திற் பயின்ற இயலிசையும்
பண்ணும் பரதமும் பாவகையாவும் பரிந்தளித்தென்
கண்ணும் மனமும் கருத்தும் இனிக்கக் கலந்துளத்தில்
நண்ணும் பதமலர் நாவார ஏத்துதும் நற்றமிழே.

**ஆலவாய் அழகன் வணக்கம்-:**

பண்ணார் இசையுருவாய்ப் பாரித்துப் பைந்தமிழ் முக்
கண்ணா ஒளிபரப்பிக் கான்மாறிக் கூத்தாடும்
பெண்ணாளும் பாகத்தோன், பிள்ளையொடும் வந்துவந்து
விண்ணோர் வியப் பெய்த வேந்தாய்ப், புலவனுமாய்
மண்ணோர்க் கமிழ்தளிக்க மாறனென விற்றிருந்து
தண்ணார் தமிழ் வளர்ப்பான் தாள் பணிதும் அம்மானாய்.

**சங்கப் புலவர் வணக்கம்:-**

ஏலவார் குழலி பங்கன் இன்னருட் பெருக்கி னால் முப்
பாலவாம் உலகு நாளும் பருகிடக் கழகம் மூன்றை
ஆலவாய் சிறப்பக் கண்டாங் கருந்தமிழ ஆய்ந்து, மாயா
நூலவாய்ச் செய்த சான்றோர் நோன்கழல் போற்றுகின்றேன்.

**பாண்டித்துரைத்தேவர் வணக்கம்-;**

நாற்றிசை போற்ற வாழ்ந்த நறுந்தமிழ் நலிவை எல்லாம்
மாற்றியிந் நாட்டின் வாழ்வு மலர்ந்திட நான்காம் சங்கம்
தோற்றிய மன்னன் பாண்டித் துரைச்சாமித் தேவர் பாதம்
போற்றியுள் மகிழ்ந்து நன்றி புகன்றுகை கூப்பு கின்றேன்.

புலவோர்க்கும் அவையோர்க்கும் போற்றி :-

பொலிகின்ற தமிழ்ச் சங்கங் கண்ட கோமான்
பொன் பாண்டித் துரைச் சாமித்தேவரின் சீர்
மலிபுகழ்தேம் பாவாலே பரவி வாழ்த்தும்
மகிழ்ச்சியொடு விற்றிருக்கும் புலவோ ருக்கும்
கலிமகிழ் வால் தொண்டேற்று விழாச் சிறக்கக்
காரியங்கள் செய்துதிகழ் நல்லோருக்கும்
தலைமகிழ்ந்து போற்றிய, தமிழ்த்தேன் மாந்தச்
சார்ந்திருக்கும் அவை யோர்க்கும் வணக்கம் கோடி.

அவையடக்கம்:-

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்க மாணவனுய்ச்
செஞ்சொற் சிலபயின்ற சின்னவனை—நெஞ்சினிக்கக்
கூடலிலே சங்கமிதைக் கூட்டுவித்த கோமகனைப்
பாடுகென்றீர் என்னே பரிவு!

தங்கப் பெயரோன் பொன்னுச்சாமித் தேவர்
இங்குத் தோன்றிய சிங்கத் தமிழன்
துங்கத் தமிழ்நலம் பொங்கப் புகழ்மிகு
சங்கம் நிறுவிய எங்கள் துரையெனும்
வெல்லத் தலைப்பினில் மெல்லச் சிலகவி
செல்லத் தேவரின் சீரிய ஆணையால்
சொல்லத் தொடங்கு முன் இப்பொழுது தளித்த
மல்லற் பொறுப்பினை மகிழ்வுடன் ஏற்றேன்

கவியரங்கத் தலைமையுரை;-

நாவந்த செந்தமிழ்க் கவிதைகள் நல்கும்
கோவிந்த ராயரின் கோலமா ரிடத்தில்
பாலனும் என்னைப் பரிவோ டமர்த்தி
பாலுகு பாடல் படைக்கும் கவிஞர்தம்
சொல்லமிழ் துண்ணெனத் துணைத்தலைவர்நம்
பாண்டித் துரைமகன் பரிசினைப் பரப்பும்
ஆண்டியப்பனர் அவர்களும், கவிஞரும்,

இன்பநல் லன்பால் இட்ட ஆணையின்
வண்ண மீண்டமர்ந்து மகிழ்வொடிவ்வரங்கை
தண்ணெனப் போற்றித் தகவுடனிருக்கும்
ஆரவை யீர் நும் சீரிய துணையொடு
அருளும் ஆற்றலும் தெருளுறு சிந்தையும்
மருவிய பெம்மான் திருமிகு செம்மல்
திங்களஞ் சடையோன் திருவடி மறவாத்
தங்கம் வழங்கிய சிங்கத் தமிழ்மகன்
சால்பினை நால்வகைக் கவிகளாற் சாற்ற
வெணவா உடையேன் எனினும் தேவர்தம்
கொடை முதலாக நாவன்மை வரை,ஏழ்
தீங்கவி வாணரிவ் வரங்கிடைத் திரண்டு
பாங்கொடு வீற்றிருக் கின்றனர் அவர் தம்
தெள்ளிய கவிதையுள் தேவரின் சீரிய
வள்ளன்மை யோடவர் வண்டமிழ்ப் புலமையும்
நூலகங்கண்ட நோன்மையும் முத்தமிழ்
சாலவளர வளர்த்த தகவும் தண்டமிழ்ப்
பாவலர்ப் போற்றிய பாங்கும், புகழ்மிகு
நாவலராக நலம்பல புரிந்த
வித்தகம் யாவையும் விளக்குவர், என்பங்கு
சங்கம் நிறுவிய தகவெடுத்துரைத் தலாம்.
அதனை என்,
முன்னுரை யாகப் பன்னியிசைத்து
மன்னரின் பிறபிற மாண்பினை மற்றைக்
கவிஞரை அழைத்துக் கழறவேண்டுவன்.

**

# சங்கம் நிறுவிய எங்கள் துரை


திருமிகு: பாவலரேறு. ச. பாலசுந்தரம்.

முக்கணமும், முக்கணரை மொழிச் செருக்கால்
முரணிஉரை செய்துயர்நக் கீரனும்
எக்களித்துத் தமிழ்வளர்த்த மதுரையின் கண்
இனியதமிழ் எங்கேஎன் றலைந்துதேடும்
துக்கநிலை கண்டுளத்தில் துணிவு கொண்டு
தொல்புகழ்தீந் தமிழ்மரபை; முச்சங்கத்தை;
ஒக்கஉரு வாக்குப்வகை முயன்றமைத்த
ஒளிதருமிச் சங்கவர லாறு நோக்கின்

செயற்கரிய செயலீதென் றுலகம் ஒப்பும்
செந்தமிழைப் புலவர்களைத் தேடிச்,சூழ்ந்த
அயற்பகையை மாற்றிய தென் பாண்டி வேந்தர்
அருமரபில் பாண்டியர்க்கோர் துரையாய்த்தோன்றி
உயற்கரிய தமிழர்துயர் நீங்கக் கண்ட
ஒளிபெருகும் நிலையமிதை நிறுவி நின்ற
வயப்புகழார் எம்பாண்டித் துரை எனுங்கால்
வாய்மணக்கும் கேட்போரின் செவிமணக்கும்

பொங்கித் தழைத்திடும் எங்கள் மனமெனிற்
போற்றி மகிழோமோ? — தமிழ்ச்
சங்கம் நிறுவிய எங்கள் துரையெனச்
சாற்றி மகிழோமோ?
தங்கத் துரைப்பாண்டித் தேவரின் சீர்த்தியைத்
தாங்கித் திரியோமோ? — இனி
எங்கும் தமிழ்வளம் பொங்க நறும்பணி
ஏற்றுப் புரியோமோ?

பொங்கிவரும் மலையருவி அருகே வேட்கை
போக்கத்தண் ணீர்ப்பந்தல் இக்காலத்தில்
எங்கணும்தன் பேர்ப்பலகை தொங்குதற்கே
ஏற்பாடு செய்பவர்கள் பலபேருண்டு



பன்னூல் ஆய்ந்த நன்னூற்புலவர்
பாண்டித்துரைத் தேவர் பாமாலை
கவியரங்கத் தலைவர் பாவலரேறு
**பாலசுந்தரம்** அவர்களுக்குப்
பொன்னாடை போர்த்துகிறார் **கல்லூரித்**
தாளாளர் **தனுக்கோடி பாண்டியனார்**

செங்கதிர்வேம் பாலையிலே பந்தரிட்டுச்
சின்னீர்தந் துயிர்காப்போர் எத்துணைப்பேர் ?
சங்கமீதைக் கூடலிலே சமைத்த காலம்
தண்டமிழ்நீர், தமிழ்நாடு பாலை, அன்றோ ?

ஆங்கிலத்தில் மோகமுறச் செய்துநாட்டை
அடிப்படுத்தி, அறிஞர்களுக் காசைகாட்டி,
ஈங்கரசு புரிந்தவரை இன்புறுத்தி,
இயன்றவரை வடமொழியை ஏத்திநின்று,
பாங்கறிந்து, மன்னர்பலர் வாழ்ந்தகாலை
பதவியரசுதவி எதிர்பாரா தஞ்சா(து)
ஓங்குபுகழ் தமிழ்வளர்க்க உறுதி பூண்ட
ஒருமன்னன் தமிழ்ப் பாண்டித் துரையாரன்றோ?

வற்றி மணல் மேடெழுந்த பேராற்றின்கண்
வளர்ந்துவிரைந் தெழுந்தொழுகும் வெள்ளம்போல,
முற்றியிருள் சூழ்ந்தநெடும் மாளிகைக்குள்
முருகியெழும் சுடர்விளக்கைப் போல, வெள்ளம்
சுற்றிஅலை இழுத்தேகுங் காலைவந்த
தோணியைப்போல்; முத்தமிழின் சுவைதேர்ந்துண்ணக்
கற்றவர்கள் இடந்தேடிக் கலங்குங்காலை
காவலனார் கண்டதன்றோ இந்தச்சங்கம் ?

சங்கத்தை நிறுவிப் போற்றித் தழைத்திடச் செய்தல் யார்க்கும்
இங்கெளி தன்று; முன்னாள் எழில்பெறத் திகழ்ந்த மூன்று
சங்கநல் வரலா றோர்ந்தோர் தம்முளம் அறியும்; சற்றே
இங்கதை நினைத்தால், வள்ளல் ஏற்றத்தை உணர்தல் கூடும்.

துலங்கொளிப்பொன் மலைதுறந்து சொக்கனாகத்
தொன்மதுரை ஆண்டபுரி சடையோன், வேலை
கலங்கநெடு வேலெறிந்த முருகவேள், தண்
கடல்குடித்த குறுமுனிவர் வீற்றிருக்க
நலங்கமழ்காய் சினவழுதி முதலாம்மாறர்
நயம் விளங்க முதற்சங்கங் கண்டார் என்ப.
இங்குறுதொல் காப்பியனார் முதலாச் சான்றோர்
இசைகமழ்வெண் டேர்ச்செழியன் முதற்பல் வேந்தர்

ஏற்ற முற இடைச்சங்கத்(து) இருந்தார் என்ப.
இளந்திரு மாறன்முதல் நக்கீரர், மற்றும்
ஆற்றல்மிகு வேந்தரொடு புலவோர்கூடி
அமைத்துகடைச் சங்கத்தை வளர்த்தாரென்ப.
நோற்றலினால் விளங்கியமுச் சங்கத்தின்பின்
நுவலரிய முத்தமிழைச் சங்கத்தேற்றிப்
போற்றுதற்குத் தென்னகத்தில் தமிழ்த்தாய் இன்பப்
புதல்வரெனத் தேவரன்றித் தோன்றினோர் யார்?

சேதுகுலத்தில் திருமால்போல் தென்னாடுய்யத் தோன்றியமால்
ஆதி கணித்தற் கியலாத அணிசேர் தமிழுக் கரண்மனையை
நீதிநெறியோ டமைத்திட்ட காலநிலையைச் சிறிதிங்கே
காதல் தமிழாற் கழறுவதென் கடமை; அவைகூர் பெருமக்காள்!

மதிவளரக் குவளைகண் விழித்து நோக்க
வண்டொலிக்கச் செங்கதிரோன் வரவு கண்டு
துதிபெருகத் தாமரைநன் முகமலர்ந்து
சூழ்பாசப் பட்டுடையைப் போர்த்துத் தெய்வ
நிதிகமழ விரிதரங்கக் கரங்களாலே
நீதியொளிர் சிந்தனைநித் திலங்கள் வீசிப்
புதிதுபடப் பூந்தமிழ்த்தேன் பெருக்கிச், சூழும்
புலமையிசைப்புள் ளொலிக்கப் பொலிந்துநாளும்

தண்டமிழ்நூல் வாவியினில் தமிழகத்துத்
தழைத்துவளர் மன்பதைதன் வேட்கைதீர
உண்டுணர்வு பூத்துநலம் மேவிஉள்ளத்
தொளிபெருக்கும் அறிவமிழ்தை மாந்திநின்ற
பண்டைநிலை மாற்றதமிழ்ப் பூந்தடத்தில்
படிப்படியாய்ப் புகுந்தவட மொழியாம் பாசி
மண்ட, அதன் பாங்கினிலே கரையைச்சூழ்ந்து
வடுகெனும் முட் புதர்தழைப்ப, இந்துஸ்தானி

கொடியோடாங் கிலமரங்கள் கூடிச்சூழ
குடங்கையள வுண்ணுதற்காம் நீர்முகக்க
முடியாத நிலைபெருகி முற்றமுற்ற
முன்னை நிலை யறியாமல் மொய்ப்பவிந்து

படியாதும் தெரியாமல் பாழாய்ப்போன,
பாராண்ட தமிழினத்தைப் பார்த்துப் பார்த்துக்
குடியோம்பும் பண்புநிறை குலத்துதித்த
கோமகனார் உளம்நொந்து, குவலயத்தார்

நாவாரச் சுவைத்து வயி றார உண்ண
நவையற்ற முத்தமிழ்நீர், பெருகி நாளும்
ஓவாமல் ஊற்றெடுக்கும் வண்ணம், நல்ல
ஊருணியை நான்மாடக் கூடலின்கண்

தாவாமற் றொட்டமைத்த சால்பைஇந்நாள்
சார்ந்தருந்தித் தழைப்பவர்கள் ஓர்தல்வேண்டும்
பாவாணர், பண்டிதர்மா ணாக்கர்மற்றும்
பலரிந்நாள் முத்தமிழ்த்தேன் பருகுகின்றார் !

"திங்களஞ் சடையோன் சேயோன் திருமகள் கேள்வன் நாகன்
தங்குறு செல்வக் கோமான் சால்பமை தேவர் பல்லோர்
இங்குவந் திருந்து மும்மை எழில்வளர் தமிழின் சீர்த்தி
பொங்குற வளர்த்தார்; என்னல் பொய்" என வாய் கூசாமல்

பேசிமுச் சங்கம் என்னல் பிதற்றுரை என்றுகூறி
ஏசிநற் றமிழர் மாண்பை இறக்கிட நினைத்தோ ரெல்லாம்
நாசிமேல் விரலை வைக்க நறுந்தமிழ் நான்காம் சங்கம்
தேசுற அமைத்துத் தெய்வத் தீந்தமிழ்க் கழகம் மூன்றும்

செப்பரும் புகழ்மோ டிங்குத் திகழ்ந்தமெய் வரலாற்றைநா (டு)
ஒப்பிடச் செய்த கோமான் ஒப்பிலாத் தமிழ்மா மேதை
செப்பரும் ஊக்கத் தாலே தீந்தமிழ் மரபைப் பேணித்
துப்புறச் செய்த பாண்டித் துரைச்சாமித் தேவர் தேவன்

வேரூன்றிச் செழித்துதமிழ் விளக்கும் பன்னூல்
வியன்கனிகள் பழுத்திடநல் லறிஞர் செய்யும்
பாரூன்றும் பண்பாட்டு மலர்கள் பூக்கப்,
பயில்கின்ற மாணவராம் வண்டுமொய்க்கச்

சீருன்றும் நூலகம்நூ லாய்வுக் கூடம்
திங்களிதழ் கல்லூரி, பதிப்பகத் தோ (டு)

ஏரான்ற அங்கமுறச் சங்கம் வைத்த
ஏந்தலுக்கு யாவரிணை? கைம்மா றுண்டோ?

இளமையில் உக்கிரப்பேர் ஏந்திய பெருமைக் கேற்ப
வளமிகு தமிழ் வாழ்வோங்க வழுதியர் வரலா றோங்க
அளவறு பணிசெய் சங்கம் அமைத்துநற் கல்விச் சான்றோர்
உளமெலாம் உவக்கச் செய்தான் உலகவர் உளத்து வாழ்வோன்

சுந்தரன் தந்த சங்கப் பலகையும் தூய்மை சான்ற
செந்தமிழ் நூலைத்தேரும் தெய்வநற் குளமும், ஏழேழ்
பைந்தமிழ்ப் புலமையோரும் பாங்குறத் திகழ்ந்த நாட்டில்
சிந்தனைக் குரியதான திருக்குறள் நூலைத் தேடும்

இழிநிலை யோடு, கம்பன் இயற்றிய நூலைக் கூட
விழிகொடு காணஇல்லா விந்தையைக் கண்டபோது
கழிபெருந் துன்பத்தாலே, கழகத்தை மீண்டும் தோற்றிப்
பழிதுடைத் திந்த நாட்டின் பரம்பரைப் புகழைக் காத்தே

மல்குநற் றுறைகள் தோறும் வாய்ப்புற வளர்ந்திச் சங்கம்
பல்கலைக் கழகமாகிப் பாரெலாம் தமிழன் மாண்பு
நல்கவுள் விழைந்தே வள்ளல் நயந்தநற் பணிகள் யாவும்
வெல்க என்றிறைவன் தாளை வேண்டுதும்-பாண்டிவேந்தர்.

நிலைபெறப் பாண்டி நாட்டில் நிறுவிய தமிழ்ச்சங்கந்தான்
கலைமிகு சோழநாட்டுக் கரந்தையில் உமாமகேசன்
தலைமைசால் சங்கந் தோன்றித் தழைத்தற்கு மூலம்என்றால்
தொலைவறு புகழ்ச்சேர் பாண்டித் துரையின்சீர் சொல்லப்
[போமோ?

வாய்மைசால் தெய்வமாக வண்டமிழ் வளர்ந்து நம்மைத்
தாய்மை கூர் பண்பினுலே தகவுறச் செய்த வள்ளல்
தோய்புகழ் பாடிப்போற்றித் துதிக்கஓர் கோயில் செய்து
தூய்மைகொள் தொண்டு செய்து துலங்கல் நம்கட்மையன்றோ?

தெய்வமாய் நிலவும் பாண்டித் தேவர்தம் அருளால் சீரத்தி
எய்துநற் பணியே செய்திங் கெழிலொடு வாழ்வோம். வள்ளல்
செய்தநல் லறத்தைப் பேணித் திகழ்பவர் பாதம் போற்றிக்
கைதொழு தமைகின்றேன் சீர் கமழ்தமிழ்த் தொண்டர் வாழி!

பாண்டித்துரைத்தேவர் பாலித்த சங்கமலம்
ஆண்டியப்பத் தேவர் அருந்தொண்டால்—நீண்டபுகழ்
சேதுபதி தண்ணருளால் செல்லத்தேவர் முதலாம்
மேதைகளால் ஓங்கும் மிளிர்ந்து

சங்கம் நிறுவிய எங்கள் துரைமகன்
பொங்கும் புகழ் நிலம் எங்கம் ஓங்குக

வாழ்க தமிழ்

வணக்கம்

நன்றி

# "கொடைமறவோன்"

புலவர் திருமிகு. இரா. இளங்குமரன்
திருநகர், மதுரை-6

கவியரங்கத்தலைவர் அறிமுகக்கவிதை:-

தமிழ்கெழு கூடல் அமிழ்துணும் அவையீர்!
அறுசுவை போல அமர்ந்துள கவிஞரை
முறைமுறை யாக நிறைநிறை கவிதை
அமுதம் வழங்க அழைப்பேன். முதற்கண்

திருநகர் அமர்ந்து செந்தமிழ் பரப்பும்
பெருமைகூர் நண்பர் அருமைசால் கவிஞர்
இளங்குமரன் எனும் இயற்றமிழ்ப் புலவர்
கோமகன் பாண்டித் துரைச்சாமித் தேவர்
"கொடை மறவன்" எனும் குவிபுகழ்த் தலைப்பில்
நடைமிகு கவிதை நவிலுவார் சுவைப்போம்.

## முன்னுரை

புவியோங்கிய தமிழ்தாங்கிய புகழ்புமாண்றும் அவையீர்,
செவியோங்கிய பொருள் தாங்கிடச் செறிவாகிய பெரியீர்,
கவியோங்கிய கனிகாவியக் கனிவாலுயர் தலைவீர்,
குவியோங்கிய கொடையாலுயர் துரைமாண்புகள் குறிப்பேன்.

தேனொலிக்கப் பாகொலிக்கத் திருவாசகு மிக்கோன்
கானொலிக்கும் வண்டென்னக் கவிஞரவை சேர்த்தோன்
வானொலிக்க வளர்ந்தோங்கும் வண்கொடையன் சீர்த்தி
நானொலிக்கக் கூடுவதோ நல்லவையீர் செவிக்கே

கன்னல் பாகில் கோல்தேனில்
கனியில் கனிந்த கவிபாடத்
துன்னும் புலவர் துணையடியைத்
துலங்க வணங்கிச் சொல்வேனால்.

நீரில்லை என்னுங்கால்
நிலைக்கின்ற உலகின்றே
நீரில்லை என்னுங்கால்
நிகழ்கின்ற அரங்கின்றே

கூடல்

கூடலெனப் பேர்கொண்ட கொழுந்தமிழ் நன்னகரீர்
மாடங்கள் கூடியுள மாண்பான கூடலிதோ?
ஏரார்ந்த செல்வநலம் ஏறியதால் கூடலிதோ?
சீரார்ந்த கலைவளங்கள் செறிந்ததனால் கூடலிதோ?
வான்மாரி பொழிகின்ற வல்லாண்மை தொலைத்தற்குக்
கான்மாறி நடம்புரியும் கண்ணுதலார் பேரருளால்
நான்மாடம் அருளியதால் நண்ணியவோர் கூடலிதோ?
தேன்கூடாம் தமிழாய்ந்து திகழ்புலவர் கூடியவோர்
சங்கத்தால் தமிழ்வளர்த்த தங்கத்தால் கூடலெனத்
தங்கியதாம் பேர்கண்டீர் தமிழ்ப்புலவர் கூட்டத்தால்
கூடலெனப் பேர்கொண்ட இந்நகரை அப்புலவர்
கூடலென வழிகண்ட கொடையாளன் பெரும்புலவன்
தென்பாண்டி முத்தாகத் தீந்தமிழர் சொத்தாகப்
பொன்பாண்டித் துரையாகப் பூத்தெழும்பு திருவாளன்
உடைமையெலாம் ஒண்டமிழின் உடைமையெனச்
[செலவிட்டோன்
கொடைச்சிறப்பைச் சொல்வேன் குறித்து.

பாண்டித்துரை

பாண்டித் துரையே! பாவலர் ஏறே!
பாண்டித் துறையில் பல்கிய முத்தே!
கூண்டிற் கிளியெனக் குடத்துள் மலரெனத்

தூண்டி எரியாத் துலங்கொளி விளக்கெனத்
தன்னியல் குறைந்து தளர்தமிழ் வளரத்
துன்னிய பொன்னே ! தூயவொண் மணியே !
பண்டையோர் கண்ட தண்டமிழ்ச் சங்கம்
மண்டிய புகழொடும் மறுபடி வாய்த்தென
ஆடற் பெருமான் அருள்வளம் கூடிய
மாடமதுரைக் கூடல் நகர்க்கண்
தேன்பா கேய்க்கும் நான்காம் சங்கம்
வான்பார் பயிர்க்கு வாய்த்த மழையென
ஆக்கிய பெரும ! அருந்தமிழ்ச் செல்வ !
தேக்கெறி பாக்கள் தீட்டிய கவிஞ !
பன்னூல் ஆய்ந்த நன்னூற் புலவ !
மன்னு வளமெலாம் மாத்தமிழ்க் காக்கிய
தன்னலங் கருதாத் தனிப்பெரு வள்ளால் !
உன்னியல் வாழ்த்தி உவந்தனன் பெரிதே.

## பாண்டியன் கொடைத்திறம்

பாலையிலே பிறந்தாராம் ; பாண்டியனார் ஆம்கரும்
பாலையிலே பிறந்தோங்கும் பைந்தமிழாம் குழந்தைக்குப்
பாலைவிடத் தகுமுணவோ பழமதுரை ? அன்புடையீர்
பாலையிடை முகிழ்த்தெழுந்த சோலையவன் பாண்டியனே!

கள்ளவிலை வாணிகத்தால் கனகோடி தேடியவர்
உள்ளழுக்கை ஊரறிய ஒட்டாமல் செய்தற்குக்
கொள்ளையடி பொருளிலொரு கோடியினைச் செலவிட்டு
வள்ளலெனப் பேர்வாங்கும் வழிகண்ட திந்நாடே !

சுருட்டென்றார் பொருளுண்டு! சுருட்டுபவர் வறியவராம்!
சுருட்டென்ற பொருளின்றிச் சுருட்டுகிற பேர்வழிகள்
உருட்டுகிறார் திரட்டுகிறார் ஊரறிய உலாக்கொண்டு
மருட்டுகிறார் வள்ளலென மாண்பான பெயரோடே!

உருவான உணர்வின்றி உள்ளான நினைவின்றி
உருவான எத்துணையோ உயர்கொடையை எங்கெங்கோ
பெருவாரி காண்கின்றோம் பெருந்தகைமைக் கொடையிதுவோ ?
வருமான வரியேய்க்க வள்ளலானோர் இவரன்றே !

கள்ளநோட் டச்சடித்தல் கவின்குடிசைத் தொழிலாக
வெள்ளமெனப் பொருள்தேடி வெடிவைக்கும் பேர்வழிகள்
வள்ளலெனப் பேர்கொண்டு வாழ்வதுதான் சுடுகாட்டுக்
கொள்ளியிலே சுடர்கின்ற கொழுநெருப்பே அவரன்றோ!

ஊராரின் செல்வத்தால் உருவாகும் ஒருநிலையம்
யாராரோ பேர்சூடி அழகாக மின்னிவரும்
சீரான செயல்மிக்க செந்தண்மைச் செய்கையுந்தான்
பாராத பாரியுமோர் பண்பட்ட ஈகையனோ?

ஊர்கொடுத்தார் நிலங்கொடுத்தார் உளமுவக்கப் பொன்
கொடுத்தார்
பேர்கொடுத்தார் சீர்கொடுத்தார் பிறபிறவும் தாம்கொடுத்தார்
யார்கொடுத்தார் அப்பாவி அவர்கொடுத்தார் இப்பொழுதோ
ஓர் அறிக்கை வெளியிட்டால் உயர்வள்ளல் ஓஓஓ!

தென்னகத்துப் புலவரெலாம் திறமான தொண்டு செய
என்னகத்தே வருகவென எதிர்கொண்டு வரவேற்றுப்
பொன்னகத்துப் பிறந்தவொரு புரவலனே இவனென்ன
இன்றைவாய்த் திகழ்ந்தவோர் ஈகையனே துரைகண்டீர் !

மோராய்ச்சி கடைவதுபோல் மூலையிலே இருந்தோரை
ஆராய்ச்சி செய்யவென அவை கூட்டி அரங்கேற்றி
சீராய்ச்சி றந்தொளிரச் செந்தமிழை வாழ்வித்த
காராய்ச்சி றந்தானின் கடப்பாடு பெரிதன்றோ!

தன்பொருளால் உருவாய தமிழ்ச்சங்கப் பேரென்ன?
துன்னியவோர் நூலகத்தின் துலங்குமுயர் பேரென்ன?
மின்னியெழு திங்களிதழ் மேற்கொண்ட பேரென்ன?
பன்னுபுகழ் வேண்டாத பண்பாளன் இவனன்றே!

உண்ணுமல் பொருளீட்டி ஒருநாளில் முழுதிழந்து
மண்ணோடு மண்ணுகி மாநிலத்து வாழ்வோரால்
எண்ணுது கழிந்தோர்கள் எண்ணிலராய் இருக்கையிலே
எண்ணுமல் அள்ளியள்ளி ஈந்தவற்கோர் எதிருண்டோ?

பாலெங்கே பழமெங்கே பஞ்சணைதான் எங்கெங்கே?
ஆலெங்கே அரசெங்கே அரட்டையதும் எங்கெங்கே
வேலெங்கே வில்லெங்கே வேட்டையிட என்பார்முன்
நூலெங்கே எனவாழ்ந்த நுண்ணியன்சீர்க் களவுண்டோ?

மாடுகளைத் தொகுத்தார்கள் மாநிதியம் சேர்த்தற்கே
ஆடுகளைத் தொகுத்தார்கள் அருஞ்செல்வர் ஆதற்கே
வீடுகளை மிகுத்தார்கள் விருப்பமெலாம் ஈடேற்ற
ஏடுகளைத் தொகுத்தான்காண் ஈகைமிகு பாண்டியனே!

தேடிப்போய் எடுப்பாரைத் தெருத்தோறும் காண்கின்றோம்;
தேடிப்போய்க் கெடுப்பாரைத் திசைதோறும் காண்கின்றோம்
தேடிப்போய்க் கொடுப்பாரைத் திறமாகக் கண்டுளமோ?
தேடிப்போய்க் கொடுத்ததுரை தேடரிய பொருளன்றோ!

## அப்பரை ஒப்ப அழைத்த வள்ளல்

ஒப்பார் இல்லா அப்பர் அடிகள்,
அப்பா வருக ! அன்பா வருக !
ஒன்று சொல்லுவேன் ; நன்று சொல்லுவேன் ;
என்றும் எங்கும் எய்தவொண்ணுத
இனிய கனியை இச்சையாய் உண்ண

உனையே அழைத்தேன் ; ஓடி வருக !
இறைவன் என்னும் இணையிலாக் கனிதான்
குறைபா தருந்தெனக் கொள்ளை ஆவலால்
கோயில் வாயிலில் கூவி நின்றனர் ;
தாயில் இனியனும் தமிழ்த்துரை மகனே
இளையரே வருக ! இனியரே வருக !
தளர்நடை யிட்டுத் தண்டுடன் செல்லும்
முதியரே வருக ! முத்தமிழ் அமிழ்தம்
புதிதுண வருக ! பூந்தேன் அருந்தப்
போகும் வண்டெனப் புகுக ! உங்கட்
குணவும் தருவோம் ; உடையும் தருவோம் ;
இணங்கும் உறையுள் எண்ணெய் மருந்து
வேலை வாய்ப்பு வேண்டும் உதவி
மாலை மணியணி மாண்புகள் அனைத்தும்
தருவோம் வருக ! தமிழ் அமிழ் தருந்தி
பெருசீர் இன்பம் பெருகவென்றே
இந்த வாயிலில் நின்றே அழைத்தார்;
காவலர் என்பதில் பாவலர் என்பதில்
நாவலர் என்பதில் நற்றமிழ் மொழியின்
ஏவலர் என்பதே இன்பெனக் கொண்டார்;
ஆர்வலர் பலரும் அகமுற வந்தார்;
தேர்ந்து கற்றார் தீஞ்சுவை பெற்றார்;
கற்பவர் ஒருபால்; கற்றுத் தேர்ச்சி
உற்றவர் ஒருபால் ஒண்டமிழ் உண்டனர்;
இலக்கணம் ஆய்ந்தனர் இலக்கியம் தேர்ந்தனர்;
நிலைக்கணம் ஈதென நிறுவிக் காட்டினர்;
கட்டுரை எழுதினர்; கவிதைகள் யாத்தனர்;
மட்டிலாப் புதையலால் மாத்தமிழ் உலகைச்
செந்தமிழ் உலகாச் செய்து மகிழ்ந்தனர்;
இந்த அளவோ? இங்கியல் தொண்டே!
முந்தை நூலைப் பதித்தனர் புதிதாய்ச்
செய்த நூலைச் சீருறப் பதித்தனர்;
மெய்யுணர் திறத்தை மேம்படக் காட்டினர்;
ஆங்காங் கொடுங்கி அரவணைப் பின்றித்
தூங்கிக் கிடந்த தொல்லை அறிஞர்கள்

தாயினை நாடும் சேயெனச் சூழ்ந்தனர்
பூவினை நாடும் வண்டெனப் புகுந்தனர்;
மூத்த தாத்தா முனைந்து வந்தார்
ஈத்தலில் ஓங்கிய பேரனைத்தேடி!
அரசரே வந்தார் ஆவித் தழுவ!
முரசம் அறையும் முழுநா வலரும்
தருக்கக் கோடரி தனிக்கூர்ப் பாக்க
விருப்புடன் வந்தார்; ஒருவர் என்ன
இராகவப் பெயரர் இருவரும் வந்தார் ;
பண்டிதர் என்ன பண்டித மணியும்
கண்டினி தாயக் கனிவுடன் வந்தார்;
இசைநலங் கனிந்த ஈழத் தடிகள்
நசைநலங் கனிந்து நன்கனம் சூழ்ந்தார்;
தாய்ப்பசு தேடித் தாவும் கன்றென
வெபசு வந்து விம்மிதம் உற்றார்;
ஈழச் சாமியும் நற்றிணைச் சாமியும்
சூழும் சைவச் சாமியும் இலக்கணச்
சாமியும் சாமியைத் தேடிச் சார்ந்தனர்;
காட்டிக் காட்டிக் காலம் கழிக்கவோ ?
நாட்டார் வந்தார் நற்றமிழ் உலகம்
கூட்டுண வழங்கிய வண்மை
பாட்டுளே அடங்கும் பான்மைய தாமோ ?

## வண்மையோ வளரும் நூல்

உந்திக்குக் கீழ்த்தோன்றி உருக்குலைத்தே உயிர்போக்க
வந்தவொரு கழலையினால் வதைந்தபேர்ச் சண்முகரைக்
கண்டறிந்து கலக்குற்றுக் காலத்தால் தக்கவரைக்
கண்டறிந்து நோயகற்றக் கனிந்துரைத்தார் பாண்டியனார்!
வாய்ச்சொல்லில் வீரரோநம் வள்ளல் பெருமகனார்?
தாயனைய பண்பாளர் வாயளவில் நிற்பாரோ?
ஓராண்டுக் காலத்திற் கோய்வளித்தார்; அந்நாட்கு
நேரான தொகையெல்லாம் நேயமுறத் தாமளித்தார்;

பரிசாக இருநூறும் பரிந்தளித்தார்; பாண்டியனூர்க்
குரித்தான வண்மையினைக் குறித்துரைக்க அளவுண்டோ?
வண்மையெலாம் சொன்னல் வளருமொரு நூலாகும்
உண்மையாம் இந்த உரை.

வந்தே மாதரம் என்று சொல்வதும்
செந்தீக்குள்ளே வீழ்வதும் ஒன்றென
இருந்த காலையில் உரிமை வேட்கையால்
கொள்ளை வணிக வெள்ளையர்க் கெதிராய்
கப்பல் ஓட்டிய ஒப்பிலாச் சிதம்பரர்
நிறுவிய கப்பல் நிறுவனத் தலைமை
பெறுவதும் எளிதோ? பெற்றுத்திறம்பட
ஆற்றிய பணியும் நூற்றடுக் காயிரம்
அள்ளித் தந்ததும் விள்ளவும் ஆமோ?
வகுத்தும் தொகுத்தும் வளர்த்தும் கூறேன்
உரையை முடித்தேன் உவப்புடன் இனிதே.

வள்ளுவம் பரவ வேண்டும்;
வாழ்வியல் துலங்க வேண்டும்.

உள்ளுவ துயர்வு வேண்டும்
உரையெலாம் செயலில் வேண்டும்;

எள்ளுவ தவிர்க்க வேண்டும்;
ஏதிலார்ப் பொறுக்க வேண்டும்;

கொள்ளுவ தறமாய் வேண்டும்;
கொடைவளம் வேண்டும் வெண்டும்.

பாராட்டு வாழ்த்து:-

கொடையேதமிழ் மாமன்னர்தம் குணமென்றிசை பாவும்
நடையேமிகு தமிழால்இளங் குமரக்கவி நமக்கு
மடைநீரெனச் செவிமாந்திட வார்த்தார் தமிழ்த்தேனை
கொடை சேர்தமிழ்த் தொண்டர்ப்புகழ் நலமுற்றிவர் வாழ்க!

# "பைந்தமிழ்ச் செல்வர் பாண்டித்துரை"

— செஞ்சொற்பாவலர். திருமிகு: ப. சங்கரலிங்கம்

அறிமுகம் :-

செங்கதி ராகித் திகழ்ந்த தேவரைக்
கொங்குத் தமிழால் குணமிகப் போற்றிப்
பைந்தமிழ்ச் செம்மல் பாண்டித் துரையெனும்
மைந்துறு தலைப்பில்நம் சிந்தை மகிழ்ச்
செங்கரும் பெனச்சுவை பொங்குங் கவிதைகள்
சங்கர லிங்கம் இங்கெடுத் திசைப்பார்

அவையடக்கம் :-

மொழிகளிலே முதல்மொழியே! எங்கள் சொத்தே!
மூத்தபெரும் ஒளிவிளக்கே! வளமே! வாழ்வே!
அழியாத கலையூற்றை அறத்தைப் பண்பை
அகிலத்தே தந்தவளே! இளமைச் செல்வீ!
பொழில்போல காவியத்தில் புதுமை செய்து
பொழுதெல்லாம் மணக்கின்ற தென்றற் காற்றே!
எழில்சேர்த்த எம்தாயே! இன்பப் பாட்டே!
இணையடியைப் போற்றுகிறேன்! தமிழைத் தரவே!

காவலர்கள் ஆண்டிருக்கும் கரந்தை வாழும்
கவியரசே! பாலசுந்தர! அவையின் மன்ன!
பாவலர்காள்! பாநெய்யும் புலமை மிக்கீர்!
பருகிடவே சூழ்ந்திருக்கும் தமிழில் வல்லீர்!
தேவார திருமறைபோல் பாண்டிச் சாமி
தமிழ்த்தொண்டைப் பாடிடுக! என்ற செல்லத்
தேவரே!நல் ஆண்டியப்ப! செயலில் வல்லோய்!
தமிழ்மன்றை அரசோச்சும் குழுவி னர்காள்!

என்வீடே என்காடே என்ஆடே என்மாடே
என்மனைவி என்மக்கள் என்சொத்தே என்சுகம்மேல்
என்கின்ற தந்நலப்பேய் இந்நாளில் தொழுநோய்போல்
மண்ணெல்லாம் பரவிநிற்கு தற்காலம் கற்காலம்!

தான்வாழ தாவளர தான்ஓங்க தானுயர
மாண்புடைய தாயகத்தை மரகதத்தை மணியூற்றை
மேன்மைமிகு தாய்மொழியை முக்கனியைத் தேன்பாகை
தான்காட்டிக் கொடுக்கின்ற தரங்கெட்ட புற்காலம்!

எப்படியும் தன்வயிற்றை எப்போதும் கழுவிடவே
தப்பெதுவும் செய்திட்டே தப்பாது வாழ்ந்திடவே
உப்பிடக் கோயில்மாடாய் உயர்ந்திடவே கோபுரம்போல்
அப்பப்பா! ஆயிரந்தான் அன்றாடம் செய்கின்றார்!

பொதுவாழ்வோ புகழ்வாழ்வோ பிறர்நலமோ பொதுநோக்
கோ
எதுவுமே இல்லாத இருட்டறையில் உழல்கின்றார்!
புதுவெள்ளப் போலியர்கள்! புற்றீசல் வாழ்க்கையினர்!
மதுவுண்ட நாகரீக மரப்பொந்து மனிதர்கள்!

முற்காலம் பொற்காலம்! புதுக்காலம்! புகழ்க்காலம்!
பொற்பெனவே பிறர்வாழ புவியெனவே தான்தாழ்ந்தும்
பிற்பட்டோர் நலம்பேணும் பெருங்கலைஞன் ஆட்சியைப்
போல்
முற்பட்டார் பிறர்க்குதவ! முன்னின்றார் நலஞ்செய்ய!

உலகத்தைப் பெற்றிடினும் உயரமிழ்தே கிடைத்திடினும்
நலமெண்ணார்! தமைநினையார்! நனிச்சிறிதும் தானுண்ணார்
வளம்சான்ற உளமிக்கோர்! வற்றாத காவிரியர்!
மலரனையார்! மாசற்றோர்! மங்காத மணிப்பரல்கள்!

செந்நெல்லை கன்னெல்லை செழித்துயர்த்தும் வரப்பினைப்
போல்
செந்தமிழின் செழுமைக்கோர் சிறப்புக்கோர் வரப்பாக
முந்தியே நின்றிட்டார்! மூத்தபெரும் சேதுவேந்தர்!
அந்தமிழ் அறிஞர்தம் அரும்பேறே நம்தலைவன்!

இந்துமதப் பெருமையினை இவ்வுலகே அறிந்திடவே
வந்துதித்த பெருநிலவு! விவேகானந்த வீரரினை
விந்தைமிகும் அமெரிக்கா வியன்புலமே அனுப்பிவைத்த
செந்தமிழர் மாமன்னர்! பாசுகர சேதுபதி

உடன்பிறப்பு! தெய்வீகக் காவலர்கள்! அருட்செல்வர்!
கடல்போன்ற அருநிதியைக் கலைவளர்த்தும் அறஞ்செய்தும்
திடல்போன்ற இந்நாட்டில் திருக்கோயில் பலஎடுத்தும்
மடல்போன்ற தமிழ்ப்பண்பை மங்கையைப்போல்
காத்தவர்கள்!

தன்சொத்தைத் தன்சுகத்தைத் தண்ணீராய்ப் பாய்ச்சியே
தான்
எண்ணற்ற காவியங்கள்! இலக்கியங்கள் எழுந்திடவே
பொன்கோடி கொடுத்தார்கள்! பொழுதெல்லாம்
உழைத்தார்கள்!
இந்நாட்டின் வரலாற்றில் எழிலேட்டைப் படைத்தார்கள்!

ஆண்டதமிழ் ஆண்டிடவே அகிலத்தே ஓங்கிடவே
பாண்டித்துரை அண்ணலவர் பைந்தமிழர் தமைக்கூட்டி
பாண்டியர்பின் பாண்டியராய்! பண்பாட்டுக் காவலராய்
மாண்டமிழ்ச் சங்கத்தை மீண்டுந்தான் கண்டுவந்தான்!

தான்வாழ்ந்த வளமனையைத் தமிழ்வளர்க்கும் கோயிலாக்கித்
தேன்தமிழ் வளர்த்திட்டார்! தெருவெல்லாம் தமிழ்பரப்பி!
மாண்டமிழ்ப் புலவராய் பழம்பெரும் சுவடிசேர்த்து
பாண்டியன் அச்சகமும் பயன்கருதா தமைத்திட்டார்

முத்தமிழில் வல்லோர்கள் மூத்தபெரும் அறிஞர்கள்
வித்தகர்கள் தமைக்கூட்டி விரிந்தாய்ந்து நறுந்தமிழின்
சத்தினையே பிழிந்தெடுத்து 'செந்தமிழ்' இதழ்வழியே
புத்தம்புது கருத்துக்கள் பொழுதெல்லாம் தந்திடுவார்!

சைவத்தின் சிறப்புணர்த்தும் 'சைவநல் மஞ்சரி'யும்
பைந்தமிழின் பொருள் நூலாம் 'பன்னூலாம் திரட்டினை'யும்
சிவஞான முருகனையே காவடிச் சிந்ததனால்
நவநவமாய்ப் பாவடித்து நறுந்தமிழில் பெருமைசேர்த்தார்

'வில்லியார்தம் பாரதத்தை' 'விரிஞான மிர்தத்தை'
சொல்வல்ல 'கதிரைவேலர் தமிழகராதியினை'
நல்லோராம் வேலரது நறுஞ்'சிந் தாமணி'யை
வல்லோராம் பாண்டித்துரை வளமுடனே வெளியிட்டார்!

தமிழ்த்தாத்தா சாமிநாதர் தந்ததமிழ் நூல்களாய
அமிழ்துநிகர் 'மேகலையும்' அரும்'புறப் பொருளினை'யும்
குமிழ்கடல்சூழ் சுன்னாகர் எல்லையிலா நூலகளையும்
தமிழ்மறையாம் 'தேவார தலமுறையும் வெளியிட்டார்'

காட்துரையார் திருக்குறளைக் கண்டபடி திருத்தியதாய்க்
கேட்டிட்ட தேவரவர் கிழ்மையர் தமையழைத்தே
போட்டிட்ட முந்நூறு படிகளையும் முதல்தந்து
போட்டிட்டார் நெருப்பதனுள் பூந்தமிழில் புகழ்சேர்த்தார்

நாராயண ஐயரெனும் நறுந்தமிழின் அறிஞனவன்
பேராய மஞ்சத்தில் பெருந்துயிலில் ஆழ்ந்திடவே
பேராளன் பாண்டித்துரை பொற்கவரி வீசிநின்றான்
காராளன் தமிழ்நெஞ்சிற் காட்டுண்டோ? இம்மண்ணில்

பாராட்டு வாழ்த்து :

செப்பரிய செந்தமிழின் மாண்பும், சீர்த்த
செயல் மாண்பும் சிந்தனையும் தேனூர்பேச்சும்

முப்பொழுதும் கொண்டுதமிழ்ப் புலவரோடு
முத்தமிழும் வளர்த்த தமிழ்த் தேளர்தொண்டை

அப்பப்பா எனவியந்து முத்தந் தத்தும்
அலைகடல்முன் அளித்த அமிழ்தெனத் தீம்பாக்கள்

ஒப்பிய சங்கரலிங்கக் கவிஞர் நாளும்
உயர்தொண்டாற் புகழ்மேவித் துலங்கிவாழ்க !

# "வண்[redacted]தமிழ் வளர்த்த வள்ளல்"

புலவர்மணி வித்துவான் திருமிகு தி. கி. சுந்தரமூர்த்தி, மதுரை.

அறிமுகம்:—

கந்தனும் அவன்தன் தந்தையும் தாயும்
வந்துவந் தருந்திச் சிந்தை மகிழ்ந்த
சந்தங் கமழும் செந்தமிழ் தேர்ந்து
முந்துறு தொண்டுசெய் சுந்தரமூர்த்தி நம்
புவவர் மணி, உயர் தலைவனை ஈங்கே
வண்டமிழ் வளர்த்த வள்ளல் என்று
கண்டினும் இனிய கவிதையால் விளங்கப்
பண்ணுவார் செவிச்சுவை உண்ணுவம் நாமே.

முன்னுரை:-

வண்டமிழை நாட்டில் வளர்த்த கொடைமறவன்
தண்டமிழ்ப் பாண்டித் துரைபற்றித்— தொண்டுமிகும்
பாமலர்கள் சூட்டப் பரிந்துரைத்தார் சங்கத்தார்
நாமவர்க்கு நன்றி நவில்வோம்.

### தமிழ்செய்தபேறு

காவலராய் வாழ்ந்தார் பலருண்டு காசினியில்
பாவலராய் வாழ்ந்தாரைப் பார்த்ததிலை— நாவலராய்ப்
பார்புகழ வாழ்ந்துயர்ந்தார் பாண்டித் துரைத்தேவர்
சீர்தமிழ் செய்ததவப் பேறு.

### தம் மாளிகையைத் தமிழ்த்தாய்க் குதவுதல்

வண்டமிழ்க்குக் கோயில் வளமனையைத் தாமாக்கித்
தண்டமிழர் சூழ்ந்திருக்கச் சால்புறவே- கொண்டசுவை
முத்தமிழால் போற்றி முறையே வழிபட்டார்
இத்தரையில் தேவரவ ரே.

### மக்கள் மனங்கவர்ந்த மன்னர்

இன்பத் தமிழ்கற்றே எல்லாரும் வாழ்வதற்கு
அன்பருளே ஈந்தே அறவுருவாய்- நன்புடைய
மன்னவராய் மக்கள் மனங்கவர்ந்த தேவரிசை
சொன்னாலும் வாய்மணக்கும் சொல்.

### செந்தமிழும் சிவநெறியும்பேணியவர்

சிந்தனைச் சிற்பியாய்ச் செந்தமிழ்ச் செல்வமாய்
வந்தவர்க் கென்றுமே மாரிபோல்- தந்து
பவநெறி போக்கப் பணிசெய்தார் பாண்டிச்
சிவநெறிச் செம்மலெனச் செப்பு.

### சங்கம்தோன்றக்காரணம்

தமிழ்வளர்த்த கூடலிலே தம்ஐயம் போக்க
அமிழ்தாம் குறட்படி யொன்றும்- அமையாத
நிலைக்கே வருந்தி நிறுவினார் சங்கம்
கலைக்கோமான் பாண்டித் துரை.

### தமிழ், தமிழர் உய்ந்திடச் செய்தார்

நான்காம் தமிழ்ச்சங்கம் நற்றமிழர் உய்ந்திடவே
பாங்காய் அமைத்திட்டார், பைந்தமிழர்: யாங்குமே
காண்டற் கரிய கவினெல்லாம் பெற்றிடவே
பாண்டித் துரைத்தேவர் பார்.

### செய்தபணிகள்

சங்கத்தோ டச்சகமும் சால்புறவே செந்தமிழாம்
திங்கள் தமிழ்மலரும் சீர்த்திமிகத்- தங்கி
சிறுவர் பலர்பயிலச் சேதுபதிப் பள்ளி
நிறுவினார் தேவரவர் நேர்ந்து.

## கலையுணர்ந்ததேவர்

மூவாது மூத்த மொழியரசி வீற்றிருக்கத்
தாவாத் தமிழ்ச்சங்கம் தாம்கண்டே- ஓவா
அருங்கலைகள் ஆய்ந்தே அரிய பணிசெய்த
பெரும்புகழார் பாண்டித் துரை.

பாசுகர சேதுபதி பண்பார் துணையுடனே
தேசுமிசச் செய்த திருக்கோயில்- வீசுபுகழ்
நான்காம் தமிழ்ச்சங்கம் நற்றமிழ்தான் செய்தவமாய்
பாங்காய் வளர்ப்போம் பரிந்து.

உரைபுதுக்கி ஒண்கவிதை தாமியற்றிச் செல்வம்
வரையாது தாம்வழங்கி வள்ளல் குறைவில்லாப்
பன்னூற் றிரட்டுடனே பன்னூல் பரிந்தளித்தான்
பொன்மகன் பாண்டித் துரை.

நந்தமிழ் நாட்டாரின் நற்றமிழ் ஓங்கியே
செந்தமிழ் நாடுய்யச் சீரமைத்தார்- பைந்தமிழ்த்தேர்
தேவரவர் தொண்டைத் தெளிந்து தமிழ்வளர்க்க
ஆவலுள்ளார் இவ்வுலகில் ஆர்.

தமிழறியார் தண்டமிழன் என்பார் தரணி
கமழ்கவிதைக் கோமகன் என்பார்- தமிழர்க்கும்
அன்பளிப்பேன் என்பார் அலர்மாலை தாமணியிவ்
வன்பருக்கே வாழ்த்துலகம் காண்.

கொள்ளை யடித்துக் குதூகலித்து வாழ்ந்திருந்த
வெள்ளை யரசை வீழ்த்தவே- பிள்ளை
சிதம்பரம் கப்பலுக்குச் செய்த பொருளுதவி
நிதம்நிதம் போற்றும் உலகு.

உ

அருமைத் தமிழுணரார் ஆன்றோர்சொல் கேளார்
பெருமை குறைகண்டு பெற்ற- பெருநிதியால்
சங்கம் நிறுவித் தமிழ்வளர்த்த தேவருக்கு
இங்குநாம் வைப்போம் சிலை.

கள்ளனைய போதை தமிழ்க்கலையில் கண்டுமே
உள்ளம் உரைசெயலில் உண்மையாய்- தெள்ளிய
தாய்க்குப் பணிசெய்த தண்பாண்டித் தேவருக்குச்
சேய்கடமை ஈதெனவே செப்பு.

நான்காம் தமிழ்ச்சங்கம் நாநிலத்தில் உள்ளவரை
பாங்காய் நினதுபுகழ் பண்புடனே- ஓங்கியே
எப்பாலும் எத்திக்கும் எங்கும் நிலவிடுமே
ஒப்பார்யார் தேவர் உனக்கு.

பன்னாட்டில் உள்ள மொழிகளிலே பண்புடைய
தென்னாட்டு நற்றமிழே! சீர்மிகுந்த - மன்னவராம்
பாண்டித் துரைபோற்றும் பார்புகழும் செந்தமிழே!
ஆண்டிடுக இன்பம் அமைந்து.

மாற்றார் பகைசூழ்ச்சி மாண்டுவிழ உன்றனையே
ஏற்றார் தொகைமிகவே இன்றுவரை - நோற்றாரை
வாழவைத்த எங்கள் வளர்தமிழே வையகத்தில்
வாழியவே நீடு வளர்ந்து.

பாண்டிக் கடல்முத்தாய்! பைந்தமிழின் நல்லிசையாய்
பாண்டித் துரைத்தேவர் பார்புகழ - ஆண்டமுறை
ஞாலம் உணரும் நறுந்தமிழை நாமுணர்ந்து
சீலமாய் வாழ்வோம் சிறந்து.

பாராட்டு வாழ்த்து:-

வண்டமிழைப்பேணி வளர்த்ததமிழ் வள்ளறனை
வெண்டளைப்பா கொண்டுகவி விண்டுரைத்த-மண்டுபுகழ்
சுந்தர மூர்த்திதமிழ்த் தொண்டால் சிறந்தோங்கிச்
சந்ததமும் வாழ்க தழைத்து.

# "பாவலர் போற்றிய காவலர்"

புலவர் திருமிகு. சி. இராமசாமி, ஒத்தக்கடை.

அறிமுகம்

பாவலர் போற்றிய காவலர் என்று
நாவலங் கமழும் நற்றமிழ்ப் புலவர்
முத்துத் தமிழினைப் புத்தமிழ்தாகச்
சித்தம் மகிழச் செய்யுள் நடையில்
வைத்துக் கொடுக்கும் ஒத்தக்கடை திகழ்
எழில்வளர் கவிஞர் இராமசாமிசெங்
கழைவளர் சாறென விழைவுறப் படைப்பார்
உள்ளம் மகிழக் கொள்ளுவ மினிதே

மூன்னுரை:-

திருவருளின் துணைபோற்றிச் செந்தமிழ்த்தாய்த்
தேன்மலர்த் தாளிணை போற்றித் தென்னன்பாண்டித்
துரையவர்தம் புகழ்போற்றித் துலங்கும்சங்கத்
தொண்டர்களின் பணிபோற்றித் தொடங்கு சீர்த்தி
மருவுவிழாக் கவியரங்கின் தலைவர்மற்றும்
வந்தமர்ந்து கேட்கின்ற மாண்புள் ளார்க்கென்
இருகரங்கள் கூப்பியிவண் கவிதைசொல்ல
எழுந்திட்டேன் பிழைபொறுத்திங் கிதங்கொள்வீரே


ஆதிசிவன் பெற்றமொழி தமிழென்றார்கள்
அகத்தியனார் வளர்த்தமொழி அதுவென்றார்கள்
பாதிவட மொழிக்கிணையாம் தமிழென்றார்கள்
படிப்படியே அதையிழிவு படுத்தஎண்ணிச்
சாதிவெறி கொண்டசிலர் சூத்திரபாடை
தமிழ்ப்பாடை என்றதனைத் தட்டிக்கேட்க
நாதியற்ற நாளினில்தான் நான்காம்சங்கம்
நாட்டினார் நம்பாண்டித் துரையாம் நல்லார்

ஆங்கிலரின் ஆட்சியினுக் கடிமைப்பட்டு
அவர்மொழிக்கே ஆலவட்டம் வீசிவிட்டுப்
பாங்குடைய தாய்த்தமிழை மறந்துபட்டம்
பதவிகட்கே தம்நாவைத் தொங்கவிட்டு
ஏங்கிநின்ற சிற்றரசர் இருந்தகாலம்
இனப்பற்றை மறவாமல் தமிழூர்மானந்
தாங்கிநின்ற தலைமகனாய்த் திகழ்ந்தார் நந்தம்
தமிழ்ப்பாண்டித் துரைவள்ளல் தரந்தான் என்னே!

அன்றிருந்த வேள்பாரி இந்நாள் உண்டோ?
அதியமான் பெரும்பேகன் போன்றோருண்டோ?
கொன்றுதலை கொண்டுகொடுத் தாயிரம்பொன்
கொள்களென வாள்கொடுத்த குமணன் உண்டோ?
பொன்றியும்பொற் கொடைகொடுத்த சீதக் காதிப்
புரவலன்தான் இந்நாளில் போந்த துண்டோ?
என்றிரங்கும் புலவர்களை இனிது தேற்ற
எழுந்திட்டார் எம்பாண்டித் துரையாம் வள்ளல்

தென்னாட்டில் சேதுபதி மன்னர் போலத்
தீந்தமிழை வளர்த்தவரார்? அன்னார் போல
எந்நாளும் புலவர்களால் போற்றப் பட்டே
இனியபுகழ் பெற்றவரார்? இன்பப்பாக்கள்
பன்னாளும் பாடிவரும் பாவல் லோர்க்கும்
பரிசளித்த பண்பினர்யார்? பாரில்உள்ள
மன்னாதிமன்ன ரெலாம்மகிழ்ந்து போற்றும்
வள்ளல்களாய் விளங்கியவர் சேது மன்னர்

மன்னர்பரம் பரையதிலே வந்த செல்வன்
மனமொழிமெய் யால்தமிழை வளர்த்த மேலோன்
தென்னகத்துப் புலவரெலாம் போற்றவாழ்ந்த
திருவுடைய புரவலரும் பொன்னுச்சாமி
தன்னருமை மைந்தனெனத் திகழ்ந்த வள்ளல்
தந்தையறி வனையமகன் தமிழ்புரந்த
முன்னவரும் எம்பாண்டித் துரையின்சீர்த்தி
முழக்குமிந்தச் சங்கத்தார் முயற்சி வெல்க!



செங்கதிராகித் திகழ்ந்த தேவர் பெருமகனாரைப்
பாவலர் போற்றிய நாவலர் என்று
பாமாலை இயற்றிய கவிஞர்
இராமசாமியாருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்
தாளாளர் தனுக்கோடி பாண்டியனார்

மாமதுரை யம்பதியில் நான்காம் சங்கம்
வளமுறவே நிறுவியதை வளர்த்து நாளும்
தேமதுரத் தமிழ்ச்சுவையை மாந்திவாழ்ந்த
தென்பாண்டித் துரைத்தேவர் சீர்த்திசொன்னால்
நாமணக்கும் எழுதிடுங்கை நனிம ணக்கும்
நாடிவந்து கேட்பார்தம் செவிம ணக்கும்
பாமணக்கும் படிபுலவர் போற்ற வாழ்ந்த
பண்புடையா ரவர்பெருமை பகரற் பாற்றோ?

பாண்டியமன் னர்கள்அந்நாள் புலவர்க் கூட்டிப்
பலவாறு பாராட்டிப் பரிசும்நீட்டி
வேண்டியநன் னூல்கள்பல வியற்றச்செய்து
விருப்பமுடன் மொழிவளர்த்த மதுரைதன்னில்
ஈண்டிந்நாள் கம்பரும் வள்ளுவரும் செய்த
இனியவிரு நூல்கள்கிடைத் திலவேஎன்று
தூண்டியநெஞ் சாலன்றோ நான்காம் சங்கம்
தோற்றுவித்தார் நம்பாண்டித் துரையாம் வள்ளல்

தாமிருந்த மாளிகையைத் தமிழுக் கீந்தார்
தகுமதில்நான் காம்சங்கந் தனைய மைத்தார்
சேமமுறு செந்தமிழ்க்கல் லூரி கண்டார்
திங்களிதழ் செந்தமிழைச் சிறக்கத்தந்தார்
நாமமுறு நூல்நிலயம் நூலா ராய்ச்சி
நடத்துநிலை யம்பதிப்புக் கழகம் போன்ற
ஏமமுறு துறைபலவும் இலங்கும் வண்ணம்
இயற்றித்தம் வாழ்வெல்லாம் இனிக்கக் கண்டார்.

நீராலும் நெருப்பாலும் சிதலை யாலும்
நிலைகுலைந்த சுவடிகளை தேடித் தேர்ந்து
சீராலும் சிறப்பாலும் தெளிவி னாலும்
செம்மையுறப் பலநூல்கள் திகழச் செய்தார்
பேராரும் புலவர்பலர் வரைந்த நூல்கள்
பதித்திடவே பொருளுதவிப் பேணிக் காத்தார்
தீராத தமிழ்க்காதற் களிப்பில் நன்கு
திளைத்திட்டார் தேவரவர் திறந்தான் என்னே.

வெள்ளையராம் காட்துரையார் குறள் திருத்தி
வெளியிட்ட நூல்பிழைகள் விரவக்கண்டே
உள்ளம்வெதும் பிடவுடனே அந்நூல் கட்கு
உரியவிலை முன்னூறுங் கொடுத்துப் பெற்றுப்
பள்ளமுறக் குழிதோண்டி யதிலே போட்டுப்
பரவாமல் தீயிட்டுக் கொளுத்தி நந்தம்
தெள்ளுதமிழ்க் குறுமாசைத் தீர்த்தா ரென்றால்
தேவரவர் தமிழ்ப்பற்றின் திறந்தான் என்னே!

சங்கத்தில் பயில்கின்ற மாணுக் கர்க்குத்
தரமான உணவளித்தும் சார்ந்த அன்னார்
தங்கவிருப் பிடந்தந்தும் தேர்ச்சிக் கேற்பத்
தகுதியுறு பரிசளித்தும் புலமை யாளர்
பங்குபெறப் பதவிபல கொடுத்தும் சூழும்
பாவாணர் பாராட்டப் பொருளை ஈந்தும்
பொங்குபுகழ் தாங்குமந்நாட் பாரி போலப்
புரவலராய் நம்தேவர் பொலிவுற் றாரே!

தேன்சொட்டும் தமிழ்க்கவிகள் தேர்ந்து''பன்னூற்
றிரட்ட''ளித்தார் சமயநெறி தழைக்கப் பத்தி
தான்சொட்டும் படி''சைவ மஞ்சரிப்''பேர்
தாங்கியநூல் களைத்தொகுத்துத் தந்தார்மேலும்
ஊன்பட்ட உளமுருக முருகன்மீதே
உயர்கவியாற் ''காவடிச்சிந்'' தொன்று செய்தார்
வான்முட்டும் புகழ்படைத்த புலவ ராயும்
மன்பாண்டித் துரைவிளங்கி மாண்புற்றாரே.

சேரமன்னன் அந்நாளில் கீரனுக்குச்
செங்கையால் விசிறிகொண்டு வீசினாற்போல்
வீரமகன் நம்பாண்டித்துரையும் தன்பால்
வித்தகநா ராயணர்க்கு விசிறிவீசி
நேரமதில் உறங்கவைத்த நிகழ்ச்சி எண்ணில்
நெஞ்சமெலாம் நெகிழாதோ? புலவ ரோடு
சாரமுள்ள தமிழ்ச்சுவையில் படிந்தோர் முத்தி
தருவான வாழ்வினையும் தவிர்ப்பா ரன்றோ?

புலவர்களால் போற்றப்பட் டுயர்ந்துவாழ்ந்த
புரவலர்பாண் டித்துரையின் புகழைப் பாடும்
வலவ னலேன் வளமறியேன் எனினும் அந்த
வள்ளலின்தாய் மொழிப்பற்றை வாழ்த்திப் போற்றும்
நிலையினிலே கவியரங்க நிகழ்ச்சி ஏற்றேன்
நிகழ்ந்தபிழை களைப்பொறுக்க வேண்டு கின்றேன்
நலமருவு தமிழ்ச்சங்கத் தார்க்கு நன்றி
நவின்று விடைபெறுகின்றேன் வணக்கம் வாழ்க!

பாரட்டு வாழ்த்து:-

காவலரின் உளப்பாங்கைக் கவினு ரல்லால்
காதலியும் கணித்தறியாள், அதனாற் பண்டைப்
பாவலர்முத் தமிழ்காக்கும் பண்பினோரைப்
பரிசுணர்ந்து பாராட்டிப் போற்றினார்கள்
நாவலந்தீ வினுக்குமா பதனை எந்த
நாளும்செங் தமிழ்ப்புலவர் மறவார் என்னும்
மேவுதமிழ் உண்மையினை இராமசாமி
விளம்பினரிப் புலவருக்கென் வணக்கம் நன்றி

# "நற்புகழ் நிறுவிய நாவலர்"

(தமிழ்நாவலர். புலவர். திருமிகு சி. அரசப்பனார்
தமிழகப் புலவர்குழுத் துணைச் செயலர்
உறையூர், திருச்சி-3)

அறிமுகம்:—

பாண்டியர்க் கெல்லாம் துரை மகனாக
ஈண்டிய புகழோ டிலங்கிய தேவரை
நற்புகழ் நிறுவிய நாவலர் என்று, அவர்
சொற்பொழி வாற்றலை சுவைகமழ் பேச்சினை
நாவலர் ஆம்ஆம் தமிழ்நா வலர்நம்
அரசப்ப னார்நம் அரசப்ப னாரைக்
கன்னற் கவிதையால் பன்னி விளக்க
முன்னியிங் குற்றனர் முத்தமிழ்த் தேனை
முகிலென வழங்குவோர் அகமுறச் சுவைப்போம்.

முன்னுரை:—

தலைவருக்கு வணக்கம்

நாட்டார்நாட் டாரென்றே நாட்டா ரெல்லாப் புகழும்
நாட்டாரையா வின் நல்லிளவல்; என்றென்றும்
பாட்டும் உரையும் பலர்போற்றும் நல்லாய்வும்
கேட்டார்ப் பிணிக்கும் சொற்பொழிவும் ஆற்றுகின்ற
நாட்டாரே! நல்வணக்கம்; நற்கவிஞா தங்களுக்கு.

தமிழ்

அமிழ்தான தமிழ்எங்கள் தாய் சுவை அனைத்தும்
நிறைகின்றதாய்
தமிழ்என்ற சிறுசொல்லிலே-இதயம் தழைக்கும்ஏன் தெரியுமா?
கமழன்பு தெய்வ அறம்-இன்பம் கலந்த வடிவம்அது!
தமிழ்ஐந்து மோடிமக்கள்-தினம் வாழ்த்திடவாழிஎன்றும்!

## கவிதைதாய்

தேனார் இசையும் அசைச்சீரும் தெளிந்தஆயும் ஒண்பொருளும்
மானார் விழியும் மகிழ்பூக்க மழலைச்சொல்லின் இன்பம்வர
வானார் கனிவு மிகக்கொண்ட வளமார் தேவர் மனம்போலக்
கானார் பொழிலின் மலரன்ன கவிதைத்தேவிமனம் வைத்தாள்!

## தேவர் தோற்றம்

திருநீறுமணம் பரப்பத் திகழ்கண்கள்
அருள்பாய்ச்சக் கருத்த மீசை
உருவிற்கு அழகூட்ட, உண்மைதனைச்
சொல்லுரைக்கப், பெரிய நெஞ்சம்
அருந்தமிழை மேலுயர்த்த அயராது
பாடுபட, அன்பால் நாட்டைத்
திருமிக்க வளமாக்கச் செயல்காட்டும்
தமிழ்நாட்டின் தேவ தேவர்!

## மக்களினம்

உயிரினம் யாவினும் உயர்ந்தநல் மக்கள்
உண்டு உடுத்தி உறங்கினால் போதுமோ?
பயிரினைப் பயிரிட மண்ணினைப் பண்ணாய்
பாங்கினால் செய்திடில் பயிர்உயிர் வாழும்
அயர்வும் பசியும் செருக்கும் அகற்றி
அன்பும் அறிவும் பண்பும் கொண்டு
உயர்ந்த சிறந்த குறிக்கோள் கொண்டே
உண்மை இன்பம் எய்திடல் வேண்டும்!

## இன்பம்

உண்ணல் இன்பம் உடுத்தல் இன்பம்
எண்ணல் இன்பம் இருத்தல் இன்பம்
பண்ணல் இன்பம் பார்த்தல் இன்பம்
பல்லிசைப் பாக்கள் கேட்டல் இன்பம்

மண்ணுள பொருள்களைத் துய்த்தல் இன்பம்
மாலை உலாவரல் இரவில் உறங்கல்
வண்ண இன்பம் ஆயினும், ஐம்புலன்
வற்றிடில் துய்க்குமோ இவ்வகை இன்பினை?

## பேரின்பம்

ஈந்து உவக்கும் இன்பம் நல்லின்பம்
இயற்கை துய்த்துக் களித்திடல் இன்பம்
சேர்ந்து கூடிக் கற்றிடல் இன்பம்
சிந்தனை செய்து ஆய்தல் பேரின்பம்;
மாயுமுன் மாயாச் செயல்பல செய்து
மாண்புகழ் ஈட்டிடல் துன்பமில் இன்பம்
தேயா இன்பமே மன்பதைக் கிலக்கு!
இன்ப மென்பதுள் ளுணர்ச்சியின் பொலிவே!

## தமிழ்ச்சங்கம்

மூன்றுபெரு சங்கங்கள் முன்னுனில் மூவேந்தர்
தாம்நிறுவி அவையழிய; தமிழ்மக்கள்
ஊன்உண்ண, உடைஉடுக்க உரிமைபோற்ற
உண்மைக்கே வழியின்றி அடிமையாக
வான்மக்கள் சிலர்நல்ல செயல்பேண வழிகாட்ட
நூலின்றிக் கலங்கியதால் சங்கங்காண
தான்வந்து சங்கம்போல் பலர்கூட்டி மலரை–நாடும்
தேனென்னப் புலவர்களைக் கூட்டினுர் நம்தேவதேவர்!

## செந்தமிழ்

நல்லவை பரவிட அல்லவை தேய்ந்திட
நாளுமே கருத்துரை சேர்ந்து வாழக்
கல்வியில் வல்லவர் கட்டுரை கவிதைகள்
கண்டிடத் தொண்டுகள் பல்கநல்க!
பல்புகழ் 'செந்தமிழ்' பாண்டித் துரைமன்னர்
பண்பினை வளர்த்திடத் தொட்டு வைத்தார்
நல்லவர் தொட்டால் நாளுமே வளர்ந்துயர்
நற்கேணி நீரதாய் ஆன தம்மா!

## நூல்நிலையம்

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் என்றகுறள்
கற்றதனுல் நம்தேவர் சங்கம் அமைத்திட்டார்
செய்புலன்கள் நலன்தேறச் சேரறிவு மேலுயரச்
சிந்தை வாழப் பல்துறையும் ஒன்ருகக்
கல்விநூல் பாங்காகக் கட்டமைத்தார் நூல்நிலையம்
கண்ணின் மணிபோலக் கற்ருேர் நிலையாக
பல்லறிஞர் கூடிப் படித்துத் துயர்போக்க
பண்பாடு வளர்ந்துயரப் பெரும்புகழ் எய்தியதே.

## நாட்டுத்தொண்டு

மொழித்தொண்டே மூச்சாகக் கொண்டுழைத்து
மூதறிஞர் வழிநடந்து அறிவுபேணி
விழியற்ருர் தமக்கெல்லாம் ஒளியேற்றி
வழிகாட்டி விளங்கும் போது,
பழிபோக்கச் சிதம்பரப்பேர் பண்பாளன்
பாங்கியரை வணிகத்தால் முறியடிக்க
வழிகண்டான்; கலங்கொண்டான்; தலைமைக்காக
பொன்பாண்டித் துரைவந்து புகழேகொண்டார்!

## விடிவெள்ளி

விடிவெள்ளி எனஎழுந்த தேவதேவர்
வேற்ருரை மாற்ருரை தன்பால்வென்ருர்
படித்துயர்ந்த மேலோரை ஒன்றுசேர்த்து
பார்த்தாய் மிகமகிழக் கப்பல்ஓட்டி
இடிபாடு குறைபாடு ஒழிந்துபோக
இன்றமிழின் உயர்விற்குச் சங்கங்கண்டார்
விடிவெள்ளி தோன்ற பாசுகரஞாயிறு
வெவ்வேருய் தோன்றியது சங்கமாக.

## வாழையடி

வாழையடி வாழையென வந்தார் தேவர்
வாழைக்கு என்றென்றும் அடிவாழை உண்டு
ஏழைக்கு அறிவுண்டு; இன்பம் வேண்டும்
என்றைக்கும் எல்லோர்க்கும் பெருமை வேண்டும்
வாழை,தென்னை பனைபோல உயர்த்தி வாழ
வாழ்நாளில் பெரும்பகுதி உழைக்க வேண்டும்!
ஏழைக்கும் பேரின்பம் எய்தல் வேண்டும்!
எல்லோரும் புகழ்பெறவே வாழ்க வாழ்க!

## பன்னூற்றிரட்டு

தமிழ்நூலில் உள்ளபல கருத்துவ்ளம்
ஒன்றாக்கித் தொகுத்து நல்ல
தமிழாகப் பிறர்புகழத் திரட்டியவர்
நம்தேவர் புலவர் போற்ற
தமிழ்த்திரட்டால் பேச்சாளர் எழுத்தாளர்
மிகப்பெரிய அறிஞராய் விளங்குகின்றார்!
தமிழ்த்தொண்டர் தொண்டுக்கு ஈடுஇணை
இனிஉண்டோ தரணி மேலே

## சைவமஞ்சரி

சைவத்தின் நெறிஅறிந்து மாறாத
மெய்யறிந்து வையம் போற்ற
செய்தவத்தால் தமிழறிவால் தேர்ந்த
நல்ல கருத்துவளம் நல்கினீரே!
உய்நெறிகள் குறிக்கோளோ டுலகொப்ப
உண்மைகளைத் தொகுத்த வேந்தர்
கைசோரா மனஞ்சோராக் கருத்தும்சோரா
கலைவள்ளல் பாண்டித்துரை வாழ்கவாழ்க!

## சேதுபதிநண்பர்

இந்துமதப் பெருமையினைக் கடல்கடந்து உலகெங்கும்
எடுத்துரைத்த விவேகானந் தாவின்
பந்தமெனச் சேதுபதி துணையிருந்து பொருளீந்து
''அரசமுனி'' எனப்புகழும் பெருமை பெற்ருர்!
அந்தமுனி தனின்'அண்ணு. பாண்டித்துரை வள்ளல்
அனைவருக்கும் வழிகாட்டி தமிழ அண்ணல்!
இந்தியரின் பெருமைத்தூண் இலக்கியத்தின் பேரிமயம்!

பாராட்டு வாழ்த்து:-

தென்னகம் வாழத் திசையெலாம் போற்ற
மன்னிய தமிழை மரபொடு மீட்டு
நாநயத் தாலே நற்புகழ் நிறுவிய
பாநயந் தேர்ந்த பாண்டித் துரைமகன்
நாவலம் விளங்க நல்லவை மகிழ
அரசப்பனூர் தமிழ் முரசப்பராக
வரிசைசெய் தளித்தனர் தண்டமி ழமிழ்தை
உள்ளம் உவக்கத் தந்த நம் நாவலர்
நறுந்தமிழ்ப் பணியால் நாளும்சிறந்து
வாழ்கென வாழ்த்தி மகிழ்வேன்வாழி!

# கவியரங்கத் தலைவர் நிறைவுரை :-

மூவிரு புலவரும் யானும் பொழிந்த
பரவுறு பைந்தமிழ் பருகி வீற்றிருக்கும்
நல்லவை யோரே! வல்விரைந் தேகும்
காலநி லையினைக் கருத்தினுட் கொண்டு
நிறைவுரை என்னும் முறைமை பற்றி
ஒருசில கூறி நிறைவுறச் செய்வேன்
வரும்பயன் நோக்கா தரும்பெருந் தொண்டால்
புகழுரு வாகநம் அகமுற விளங்கும்
பாண்டித் துரைச்சாமித் தேவரை நாட்டில்
ஈண்டிய யாவரும் ஏத்திப் போற்றும்
கடமை உடையார் எனினும், அவர்தம்
பணியால் இந்நாள் அணிபெற வாழும்
செந்தமிழ்ப் புலவர்க்குச் சிறந்த கடமையாம்
பாலவ னத்தம் பாலனம் புரிந்து
வாலறி வாலே வண்டமிழ் வளர்த்த
காண்டகு சிறப்பின் பாண்டித் துரைமகன்
செந்தமிழ்க் காற்றிய மைந்துறு தொண்டினுள்
சிந்தைக் கினிய சிலபணி பற்றி
வந்தனைக் குரிய வளர்தமிழ்க் கவிஞர்
டண்ணிசை போலநண் ணியிங் கெழுவர்
தண்ணென இசைத்தனர் புண்ணியத்தலைவர்
குலங்குடி இனமொழி நாடிவை தமக்கெலாம்
அப்பாற் பட்டவர் எனினும், அவர்தாம்
பிறந்த குலத்திற் பிறந்தவர் தமக்குச்
சிறந்தபெருமை சேர்ந்த தல்லவோ?
குடிப்பிறந் தார்க்கும் கூடிய தல்லவோ?
தமிழ்நா டிந்நாள் தலையெடுத் துயர்ந்து
கமழ்கிறதன்றோ? கருதிப் பார்மின்!
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்ந்நன்றி கொன்ற மகற்கென வள்ளுவர்
உன்னி உரைத்ததை ஓர்மின்! ஒ ந்தவர்
குலங்குடி இனமொழி நாட்டினைச் சேர்ந்தவர்
தேவர்க னவெலாம் நினைவாய்த் திகழச்
சொக்கனின் அருளால் தக்கதொண் டாற்றுமின்!
காவலர் பெருமான் கண்ட கனவினுள்
காற்பங் கேனும் நடைபெறக் காணோம்
மேற்பங் காகிய முக்காற் பங்கினை
எக்கா லத்தில் இயற்றுவது? இன்னே
மூவர் தம் உருவாய் முளைத்த தேவரின்
சிந்தை குளிரச் செந்தமிழ்த் தொண்டு
புரியத் தொடங்குவோம் புலவரைப் போற்றுவோம்
இனங்காத் திருப்போம் எனக்கூ ளெடுப்போம்
என்றென் நிறைவுரை கூறிஇங் கமைந்துள
சான்றோர்க் கெல்லாம் வணக்கங் கூறிச்
சங்கத் தொண்டினைச் சால்புறப்புரியும்
பராவுநற் புகழ்சேர் பைந்தமிழ் மன்னர்
இராம நாத சேதுப திகளின்
பொன்னடி போற்றிப் புகழ்மிகு தொண்டர்
செல்லத் தேவர் சேவடி பரவுதும்
செயற்குழு உறுப்பின ராகித் தொண்டுசெய்
கந்தசா மியாம் கண்ணிய னார்க்கும்
பெரியசாமியாம் பெருந்தகை தமக்கும்
மலைச்சாமியாம் மாண்புடை யாருக்கும்
சங்கர பாண்டிய னார்க்கும் சால்புடை
தனுக்கோடி பாண்டிய னார்க்கும் இனிமைசால்
ஆண்டி யப்பராம் அருந்தமிழ்த் தொண்டருக்கும்
நாகம ணியாம்நல் லோருக்கும்
தேவசி காமணித் திறலோர் தமக்கும்
நன்றியும் வணக்கமும் நனிமிகக் கூறி
என்றும் இதுபோல் இன்பணி புரிந்து
வாழ்கென வாழ்த்தி மகிழ்கிறேன். வணக்கம்

வாழ்க தமிழ்!
வளர்க தேவரின் தொண்டு

# இரங்கற்பாக்கள்

தென்னர்பல ரொருதமிழை மூன்றுமுறை
வளர்த்துமது சிதைந்த தென்னு
முன்னருறு மறிஞரெலா மெழுதியகா
தையிற்கேட்டே முகவை வாழ்ந்த
மன்னர்புகழ் தருபாண்டி மகிபாநீ
யேயதனை வையத் தென்றும்
நன்னர்நிலைத் திடநட்டாய் பிரிந்தாயின்
றிரண்டுநின்பால் நாங்கண் டோமே
மறுதெய்வம் முத்திதர வல்லவல்ல
வெனத்தேறு மனத்தாற் காமற்
றெறுதெய்வ மறவாது தொழும்பாண்டித்
துரையேநின் றேவி மாரோர்
சிறுதெய்வம் பழிச்சினரென் றிடவடங்காச்
சினத்தாவி தீர்ந்தா யென்று
ஓறுதெய்வம் பொலிசைவத் துணையல்லா
லுயர்ந்தோரு முளரோ வையா.
தேருக்குச் சிறந்தவொரு சிகரமெனச்
சொலும்பாண்டித் தேவே மேவுங்
காருக்குக் கொடைபயிற்றுங் காதலத்துப்
பெருந்தகையே களிப்பா லெம்பாற்
பேருக்குப் பிரியமன முடையே னென்
றனைபோலும் பிழையாய் மேலை
யூருக்குப் பிரியமன முடையேனென்
றதையுணரே முணரே மையா.

---

மேதகு. வயி. நாக. அ. இராமநாதச்செட்டியாரவர்களால் பாடப் பட்டவை.

செ. தொ. 10

(தொகுப்பு ஆ. ஆ)

# மதிப்புரை

உன்னைச் சரணடைந்தேன்
ஆசிரியர்: திருமிகு. கு. செ. இராமசாமி. எம். ஏ.
வெளியீடு: சிவகங்கை, அரண்மனை அறநிறுவனத்தார்.

சிவகங்கை,

வீரத்தின் விளைநிலமாம் சிவகங்கைச் சீமை, வியத்தகு சாதனைகள் நிகழ்த்தித் தென் பாண்டிநாட்டின் வரலாற்றிலே பெரும் புகழ் கொண்டு இலங்குவது. இலக்கியச் சிறப்பும், வரலாற்றுச்சிறப்பும் பெற்ற அம்மறவர் நாட்டைக் கோலோச்சிய மன்னர் கௌரி வல்லபத்தேவர் பரம்பரையினர் வழிபடும் குலதெய்வமே ஸ்ரீ இராச ராசேசுவரியம்மன் சிவகங்கை அரண்மனையில் குடி கொண்டுள்ள அத்தேவியின் வழிபாட்டுக் குரிய 47 பாமாலைகள் அடங்கியதே இப்பெரும் நூல்.

"கவிஞர் இராமசாமியாரின் கவிதைகள் காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும்" என்றும், இப்பாக்கள் "திண்ணைப் பள்ளிச் சிறுவர்களுக்கும், விண்ணைப்பார்த்துப் பொழுது போக் கும் தாத்தா, பாட்டிகளுக்கும் சொந்தம்" என்றும் அழகுற எடுத்துக் காட்டியுள்ளார். இற்றைய மன்னர் மேதகு. கார்த்தி கேய வேங்கடாசலபதி இராசா அவர்கள். அவரது அன்பும், பண்பும் தோய்ந்த இறைப்பற்றும் தமது முன்னோர்கள் பெருமைக்குச் சான்று கூறும் வண்ணம் அமைந்துள்ளன.

அறுவகையான தெய்வ வழிபாட்டு முறைகளை அழகுற எடுத்துக் காட்டி "சக்திவழிபாடே சமரசவழிபாடு, சன்மார்க்க வழிபாடு" என்பதைச் சீரியமுறையில் நேரியவழியில் எடுத்துக் காட்டியுள்ளார் கவிஞர் திருமிகு. இராமசாமியார்.

இளஞ் சிறார்களின் பிஞ்சு நெஞ்சிலே இறைப்பற்று வளர்ந்தோங்க இது போன்ற நூற்கள் பெருந் துணைபுரியும் என்று உறுதியாக நம்புவோமாக.

பதிப்பாசிரியர்
ஆ. ஆண்டியப்பன்.